aat SRI LANKA
6000.00 for 6 Months
026 222 76 22 - 077 02 03 201
Veal Business College



அறைவு 03 இயம் 08 September 20-26 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 16 விலை : 30.00

CCTV Installation & Maintenance
PHOTONTECH
175, Main Street Trincomalee
075 6602486

# நிதி வசூலிப்பில் அரச நிறுவனங்கள் !

## தராவிட்டால் கொள்வனவை நிறுத்துவோம் என எச்சரிக்கையா?



சிறுவர் தினம் மற்றும் ஏனைய விசேட தினங்களைக் கொண்டாடுவதற்கும், ஊழியர் நலன்புரிச்சங்க நிதிச் சேகரிப்புக்கும் என வர்த்தகர்களிடம் அடாவடியாகப் பணம் பறிக்கும் முயற்சிகளில் சில அரச நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் 13

# பாடசாலை மாணவர்களை வெளிவாரியாகப் பரீட்சைக்கு அனுப்பும் முயற்சி தோல்வி!!

### 80 வீத வருகை தராதவர்களையே பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கவில்லை - அதிபர்

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்கு மாணவர்களை வெளிவாரியாக விண்ணப்பிக்க வைக்கும் முயற்சியொன்று தோல்வி கண்டுள்ளது.

திருகோணமலை செல்வநாயகபுரம் பாடசாலையில் சுமார் 22 மாணவர்களை வெளிவாரியாக சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரிய வந்ததை அடுத்து வலயக் கல்விப் பணிமனை குறித்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய இம்மாணவர்கள் உள்வாரியாக விண்ணப்பிக்க விசேட அனுமதியளிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக அப்பாடசாலை அதிபர்............... 13

# ஐயனார்கேணி கொலை வழக்கின் சந்தேகநபர்கள் சிறையில் !

### மற்றொரு கொலையில் 2வது சந்தேகநபர்!!??

திருமலை நகரை உலுக்கிய ஐயனார்கேணி கொலை வழக்கின் சந்தேக நபர்கள் இருவரும் மீண்டும் தடுப்புக் காவலில் இடப்பட்டுள்ளனர்.

முதலாவது சந்தேக நபரான அகில மேனக மல்லிகாகே தொடர்ந்து மன்றின் அழைப்பாணைகளுக்குச் சமூகமளிக்காத நிலையில் கடந்த வாரம் திருகோணமலை நீதிமன்றில் சமூகமளித்திருந்தார். 13

# மாவட்டச் செயலாளரின் ஓய்வு இழுபறியில்!!

## பல லட்சங்களில் பிரியாவிடைக்கு திருமலை பிரதேசச் செயலகம் தயார்!

திருகோணமலையின் மாவட்டச் செயலாளராகப் பதவி வகித்து வந்த முன்னாள் இராணுவ அதிகாரியான ரி.ரி.ஆர் டி சில்வா எதிர்வரும் 30ம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் செல்வதாகவும் புதிய மாவட்டச் செயலாளராக இரத்தினபுரியைச் சேர்ந்த நிர்வாக சேவை அதிகாரியான அசோக ரஞ்சித் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய மாவட்டச் செயலரின் ஓய்விற்கு எதிராக நடவடிக்கைகளை மாகாண சபையின் பெண் தலைவர் மேற்கொண்டுள்ளதாகவும் அதனையடுத்து அவரது ஓய்வு எதிர்வரும் டிசம்பர் வரை பின் தள்ளப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.




எனினும் பதவியோய்வு பெற்றுச் செல்லும் மாவட்டச் செயலாளருக்கான பிரியா-விடைகள் பிரதேசச் 13

# 25 வீத குறைப்பு உடனடியாக பிரயோகத்திற்கு வராது

சனாதிபதி அறிவித்ததற்கு அமைய மின்சாரக் கட்டணங்கள் அடுத்து வரும் பட்டியலில் குறைந்து வராது என தெரிகின்றது.

எதிர்வரும் மாதம் கிடைக்கப்பெறும் மாதாந்தக் கட்டணப் பட்டியலில் இத் தொகை குறைக்கப்படாமலிருப்பதைக் கண்ணுற்று பாவனையாளர்களை அதிர்ச்சியடைய வேண்டாம் என்று இலங்கை மின்சார சபை (இ.மி.ச) கோரியுள்ளது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான நடவடிக்கைகள் 13

# கட்டுமானங்களில் மட்டுமே கிழக்கிலும் வடக்கிலும் அபிவிருத்தி

### மக்களின் வாழ்க்கையில் இல்லை



கிழக்கிலும் வடக்கிலும் போக்குவரத்து மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி மட்டுமே நடைபெறுகின்றது. தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அபிவிருத்தி எதுவும் நடைபெறவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆங்கில வார இதழொன்றிற்குச் செவ்வியுள்ளார்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தின் முடிவில் போர் விதவைகள், அங்கவீனர்கள், 13

# நீதி கிடைக்கும் வரை விடப்போவதில்லை

### பிரான்ஸ் தூதுவராலயம் அறிவிப்பு



மூதூரில் சுட்டுக் கொல்லப்பட்ட 17 தன்னார்வத் தொண்டர்களின் மரணம் தொடர்பாக நீதி கிடைக்கும் வரை அவ் வழக்குகளை நெருக்கமாக அவதானித்துக்கொண்டிருப்பதாக பிரான்ஸ் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

"நீதியான தீர்வு கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக மிகவும் நெருக்கமாக இவ்வழக்கின் விசாரணை விருத்திகளை அவதானித்துக் கொண்டு 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## பதவிகளால் பேயாகும் மனிதர்கள்!

உலகில் கல்வி முறையொன்று உருவாக்கப்பட்ட போது அதன் முக்கிய நோக்கமே வீடு பேற்றை அடைதல் (முத்தியைப் பெறுதல்) என்பதே நோக்கமாக இருந்தது. பின்னரான காலங்களில் கல்வியின் நோக்கம் சமுதாய முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டுக்கும் பயன்படும் கருவியாக அமைதல் என்பதாக இருப்பதாக பேராசிரியர் கைலாசபதி ஐயா அவர்களின் எழுத்தொன்று தெரிவிக்கின்றது.

எனினும் அவருக்குப் பின்னரான இக் காலத்தில் கல்வி என்பது பொருட்பேற்றை அடைந்துகொள்ளும் கருவியாக மாந்தரால் செயற்படுத்தப்படுகின்றது. அனைத்தும், மனிதர் உட்பட, ஓர் உற்பத்திப் பொருள் என்னும் கொள்ை(க)ள எம்மில் மேலோங்கி விட்டது. பொருட்கள் எனில் அவற்றிற்கு விலையுண்டு என்பதனை வெளிப்படையாக அஃறிணைப் பொருட்களுக்குக் குறிக்கும் நாம் உட்கிடையாக பொருட்களாகிவிட்ட மனிதர்களுக்கும் விலையை, பெறுமதியைக் குறித்துக் கொண்டுள்ளோம்.

அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக பதவிகள் என்பதையும் பொருட்பேற்றை அடைவதற்கான வாகனமாக மாற்றிக் கொள்ளத் தலைப்பட்டுள்ளோம். பதவி என்னும் வாகனத்தில் ஏறிப் பொருள் தேடப் பயணித்து விட்ட நாம் பேய்களாக மாறிவிட்டதை பல விடயங்கள் எமக்கு வெளிக்காட்டத் தொடங்கிவிட்டன.

இறுதியாக கல்வி என்பது பேய்களை உருவாக்கும் ஓர் வழியாக போய்விட்டதோ என்ற எண்ணத்தை உண்மைக் கல்வியியலாளர்கள் கருத்திற் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர்கள், செயலாளர்கள், அதிபர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் என பதவிகள் பேயாக்கிய மனிதர்களைக் காணக்கிடைக்கின்றது.

கல்வி முறையின் மாற்றமானது உலகமயமாதலின் பால் உள்ளீர்க்கப்பட்ட போது கல்வியின் நோக்கம் பொருளீட்டல் என்ற முறைமையை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனால் கல்வி முறையின் முக்கிய வேரான மனிதாபிமானம் மற்றும் ஒழுங்கு என்பவைகூட பணப்பெறுமதியைக் கொண்டு அளவிடத் தக்கவையாக மாறியுள்ளன.

எவ்வாறெனினும் பணத்தைச் சொந்தமாக்கிக் கொள்பவர்களைச் சமூகம் கொண்டாடவும் பிரதம அதிதிகளாக அழைத்துக் கொள்ளவும் தயக்கமின்றிச் செயற்படுகின்றது. உண்மையைப் பேசுபவர்களின் பக்கம் போகாமல் இருக்க அச் சமூகத்தின் முன்னோடிகளிற் சிலர் தயங்குவதில்லை.

ஆனால் இப் போக்கைக் கல்விச் சமூகமும் பாடசாலைகளும் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளமையானது வளர்ந்துவரும் குழந்தைகளின் மாதிரித் தலைவர்களாக (Role Model) அவர்களையும் அவர்களின் பண்புகளையும் கற்றுக்கொள்ளப் பாடசாலையே இடம் கொடுக்கத் தயாராகியுள்ளதே! இதுவெ எமது இனத்தின் மிகப்பெரிய கேடாகிக் கொண்டு இருக்கின்றது.

பதவிகளால் பேயாகத் திரியும் சிலரை, பண மற்றும் பதவிப் பச்சோந்திகளைப் பிரதம விருந்தினர்களாக அழைக்கும் பழக்கத்தைப் பாடசாலைகள் நிறுத்திக்கொள்ள முன்வர வேண்டும். இல்லாவிட்டால் ஒழுங்கு என்பதைப் பேசுவதற்கு எந்த அதிபருக்கும் தகைமை இருக்காது என்பதை உள்ளத்திற் கொள்க!

## கைதிகள் தினத்தில் கைதிகளாகவே நடாத்தப்பட்ட கைதிகள்

திருகோணமலையில் நடைபெற்ற கைதிகள் தினக் கொண்டாட்டங்களில் கைதிகள் கைதிகளாகவே நடத்தப்பட்டதையிட்டு பார்வையாளர்களால் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இம் மாதம் 12ம் திகதி இலங்கை முழுவதும் கொண்டாடப்பட்ட சிறைக்கைதிகள் தினத்தினை திருகோணமலை சிறைச்சாலை கடந்த 18ம் திகதி திருகோணமலையிலும் கொண்டாடியது. இந்நிகழ்வு சிறை அத்தியட்சகர் தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றன. அதற்கு வருகை தந்த கைதிகளை அன்றும் கைதிகளாகவே நடாத்தியது வருத்தம் தருவதாக அங்கு வருகை தந்திருந்த பலர் தெரிவித்தனர்.

இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கான சித்திர போட்டி, விவாத போட்டி, பேச்சு போட்டி என்பனவும் நடாத்தப் பட்டது. விவாதப் போட்டியில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி செல்வநாயகபுரம் மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டது. மற்றொரு போட்டியில் புனித மெதடிஸ் கல்லூரியை விபுலானந்தா கல்லூரி வெற்றிகொண்டது.

சிறைச்சாலைக் கைதிகளால் காட்சிக்கு வைக்கப்பட்ட அவர்களின் கைவினைப் பொருட்களை பார்வையிட்ட பிரதம அதிதியான கிழக்கு மாகாணசபைத் தவிசாளர் ஆரியவதி கலப்பதி தனது உரையில் இவ்வளவு கலைத்திறன் கொண்டவர்களாகிய நீங்கள் ஏன் குற்றங்களைச் செய்துவிட்டு சிறைக்கு வருகின்றீர்கள், இக் கலைத்திறனைக் கொண்டே உழைத்து வாழ முடியும் அல்லவா எனக் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பிரதீஷன்)



## போலி ஆவணங்களைத் தயாரித்த அலுவலர் கைது?

பொய்யான குடும்ப பின்னணி அறிக்கையை தயார் செய்து பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த ஒருவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கைது செய்துள்ளது.

பணியகத்திற்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணியாற்றிய அபிவிருத்தி உதவி அதிகாரி என தெரியவந்துள்ளது.

சிறுப்பிள்ளைகள் இருக்கும், மற்றும் வெளிநாட்டு தொழில் புரிய செல்லும், வயதை கடந்த பெண்கள் என பெரும் எண்ணிக்கையிலான பெண்களை போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியுள்ளது.



## வடக்கு கிழக்கு மாகாண சபைகளைக் கலைக்க வேண்டும்

வடக்கு கிழக்கு மாகாணசபைகளை அரசாங்கம் கலைக்க வேண்டுமென தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் தவறான பாதையில் செல்ல முயற்சிக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யோசனைத் திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் போராட்டங்களை நடத்தப் போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதமளவில் போராட்டம் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளை மிகவும் நிதானமாக கவனிக்க வேண்டும்.

உடனடியாக வடக்கு மாகாண சபைகளை கலைத்து, அதிகாரத்தை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்தும் உள்ளார்.



## "செம்பீஸ்வரர் ஆலயத்திற்குச் செல்ல அனுமதியுங்கள்"

### -ஜெ.ஜெனார்த்தனன்-

(அச்சுதன்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்திற்குற்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் செம்பீஸ்றர் ஆலயத்திற்கு சுதந்திரமாகச் சென்று வழிபடுவதற்கு மக்கள் அனுமதிக்கப்படவேண்டும் என கிழக்குமாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் கோரிகிகை விடுத்தர்.

குச்சவெளி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற குச்சவெளி பிரதேச ஒருங்கிணைப்புக்கு முன் கூட்டத்தில் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பல தசாப்தகாலமான மக்கள் இவ்வாலயத்திற்கு சென்று வழிபட்டு வந்தனர். தற்காலப்பகுதியில் அவ்வாலயம் அமைந்துள்ள மலைப்பகுதியானது இராணுவத்தினரின் கட்டுபாட்டுக்குள் இருந்து வருகின்றது மக்கள் வழிபாட்டிற்கு செல்வதற்கு இராணுவத்தினரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. எனினும் தற்போது அப்பகுதியானது தொல்பொருள் திணைக்களத்திற்கு உரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'திருமதி. காயத்திரி ஸ்ரீதரன்'னின் "சலங்கைபூசை" நடன நிகழ்வு

திருகோணமலை ஸ்ரீ நர்த்தனா நடன கலாலயம் வழங்கும் சலங்கை பூஜை - 2014 நடன நிகழ்வு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் 2014.09.21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி.காயத்திரி ஸ்ரீதரன் அவர்களின் நட்டுவாங்கத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு கன்னியா சுவாமிகள் ஸ்வத்தானந்தா அவர்கள் தலைவராகவும். பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. W.A.L. விக்கிரம ஆராச்சி பிரதம விருந்தினராகவும் ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. தே.முருகுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கையர் என்ன பாதுகாப்பு ஆலோசகரா?



சிங்கப்பூரில் உள்ள இலங்கைக் கல்வியாளர் ஒருவர் 'புலனாய்வு ஆலோசகர்' போன்றதோர் தோற்றப்பாட்டுடன் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அடுத்து அவர் தொடர்பாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவ்வாறானதொரு பதவி இன்னும் தோற்றுவிக்கப்படவில்லை என்பதால் அவ்வாறு குறிப்பிட்ட கல்வியியலாளர் செயற்படுவதற்குத் தாம் பொறுப்பல்ல என இலங்கைத் தரப்பு தெரிவித்துள்ளது.

### தேர்தல் ஆணையாளருடன் 'பிக்குகள்'



கடந்த வாரம் பத்திரிகை மாநாடொன்றை நடாத்த வருகை தந்த தேர்தல் ஆணையாளருடன் ஜாதிக சங்க சம்மேளன அங்கத்தவர்களான நாலு பிக்குமாரும் உடன் வந்திருந்தனர்.

அவர்கள் தேர்தலுக்காக மக்களுக்கு பணமும், பெண்களும் வழங்கப்படுவதாகவும், வெள்ளை உடைகள் வழங்கப்படுவதாகவும் முகப்பில் வாக்காளர் இலக்கம் பொறிக்கப்பட்ட தாள்களால் சுற்றப்பட்ட உணவுப் பொதிகள் வழங்கப்படுவதாகவும், நீர்ப் போத்தல்களில் வாக்காளர் இலக்கம் பதிக்கப்பட்ட தாள் சுற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

### விடுமுறையில் கூட கண்காணிப்பு

உள்நாட்டவர்கள் உல்லாசவிடுதிகளுக்கு வரும்போது அவர்கள் தொடர்பான விபரங்களை அந்தந்தப் பிரதேசக் காவல்துறையிடம் கையளிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

காவல்துறை உயர் பிரிவுகளால் வழங்கப்பட்ட இவ்வறிவுறுத்தலுக்கு அனைத்து உல்லாச விடுதிகளும் அமைந்தொழுகத் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

### வரியின்றிச் சுங்கம் விடுவித்த இரண்டு கொள்கலன்கள் - எதிர்ப்பு கிளம்புகின்றது

கிறனைட் பொருட்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு கொள்கலன்கள் வரியின்றி விடுவிக்கப்பட்டதை அடுத்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவரினால் பின்புலப்படுத்தப்பட்ட இறக்குமதியாளர் தனது வீட்டுத் தேவைக்காகவே அப் பொருட்கள் இறக்கப்பட்டன என வழங்கப்பட்ட உறுதிக் கடிதத்தை அடுத்தே இக் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக் கொள்கலன்களின் உண்மை நிறையை விட குறைவான நிறையே ஆவணங்களில் காட்டப்பட்டிருந்தது. இதனால் உண்மை நிறைக்குச் செலுத்த வேண்டிய வரி ஏய்ப்புச் செய்யப்பட்டுள்ளதாம்.

### கனடாவிற்குள் நுழையத் தடை

கனடாவில் நடைபெறும் சர்வதேச மாநாடு ஒன்றுக்குச் சமூகமளிக்கும் முகமாக இலங்கையின் இரண்டு சிரேட்ட அலுவலர்கள் விசா கோரி மேற்கொண்ட விண்ணப்பங்களை கனடா நிராகரித்துள்ளது.

இவ்விருவரும் சிறைச்சாலைத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது முதலாவது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போது இரண்டாவது முறையிடு செய்யப்பட்டது. எனினும் அதனையும் கனடா நிராகரித்துள்ளது.

இந் நிராகரிப்புக்கான காரணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் மனித உரிமை மீறலில் ஈடுபட்டிருக்கலாம் என கனடா நினைக்கின்றது என தாம் சந்தேகிப்பதாக இலங்கைத் தரப்பு தெரிவித்துள்ளது.

### இலங்கையில் ஒரு இரவு - மாலைதீவிலே இரண்டு



சீன ஜனாதிபதி மாலைதீவில் இரண்டு இரவுகளை கழித்திருப்பதுடன் இலங்கையில் ஒரு இரவை மட்டுமே செலவிட்டுள்ளார்.

### அகதிகளை நாடுகடத்த முயற்சி

#### ஐ.நா அமைப்பு நிறுத்துமாறு கோரிக்கை

நாட்டிலுள்ள அகதிகள் மற்றும் தஞ்சம் கோருவோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக அவர்களை நாடு கடத்துவதை நிறுத்துமாறு ஐ.நா வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் அகதிகளுக்கு எதிரான கைதுகள் சட்டவிரோத தடுத்து வைப்புக்கள் மற்றும் நாடுகடத்தல் தொடர்பாக தாம் கவலையடைந்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் 'தற்போது வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை தாம் பார்வையிட அரசு தற்போது வரை அனுமதிக்கவில்லை' என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

### இராசதந்திர பொதிகளின் பொறுப்பு தூதுவர்களிடம்



உலகெங்கிலும் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பொதிகளின் பாதுகாப்பு அந்தந்த தூதுவராலயத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள தூதுவர்களிடமே வழங்கப்பட்டுள்ளது. சியோல் நகரிலிருந்து அனுப்பப்பட்ட இராசதந்திரப் பொதியிலிருந்து தங்க ஆபரணம் களவாடப்பட்டதை அடுத்தே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## the Sunday Leader

### ஐ.நா வின் வருகைக்கு மீண்டும் அனுமதி மறுப்பு!




கட்டாயப்படுத்திக் கடத்தப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள ஐ.நா வின் செயற்படு குழு இலங்கைக்கு வருவதற்கு மேற்கொண்ட விண்ணப்பத்தை இலங்கை நிராகரித்துள்ளது. சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் விசாரணைகள் முடியுமட்டும் இவ்வாறான குழுக்களுக்கு அனுமதியில்லை என தெரிவிக்கப்பட்டே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### கோத்தாவைச் சந்திப்பது தொடர்பாக கட்சியுடன் ஆலோசனை - விக்கி

13வது திருத்தம் தொடர்பாக பேச வருமாறு வடமாகாண முதலமைச்சருக்கு விடுக்கப்பட்ட கோத்தாபாயவின் அழைப்பை ஏற்றுக் கொள்வது தொடர்பாக தனது கட்சியுடன் ஆலோசனை செய்யப் போவதாக விக்கி அறிவிப்பு.

### நிபுணர்கள் சந்திப்பு

காணாமற்போனோர் தொடர்பாக சனாதிபதி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்களுடன் உள்நாட்டு நிபுணர்களும் முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பை நிகழ்த்தியுள்ளனர்.

### போகம்பறையின் தூக்கிலிடும் பொறி நூதனசாலைக்கு



போகம்பறைச் சிறையில் உள்ள தூக்கிலிடும் பொறியை சிறைச்சாலை நூதனசாலைக்கு மாற்றுவதற்கு முடிவு எடுத்துள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார். போகம்பறைச் சிறைச்சாலையில் இருந்து புதிய சிறைச்சாலைக்கு இத் தூக்கிலிடும் பொறியை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இல்லையெனவும் அவர் தெரிவித்தார். மேலும் இலங்கையில் தூக்கிலிடுவதற்கான வெற்றிடம் தற்போதும் நிரப்பப்படாமலிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## Sunday Observer

### சனாதிபதிக்கு வன்முறையால் வெல்வது பிடிக்காது - டலஸ்



சனாதிபதி மஹிந்த ராசபக்ச வன்முறையைப் பாவித்து தேர்தலில் வெற்றி பெறுவதை எப்போதுமே விரும்புபவரல்ல என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். அதனால் நாங்கள் மதிப்புள்ள வெற்றியொன்றை ஊவாவில் பெற்றுக் கொள்வோம் என மேலும் அவர் பகிர்ந்தார். நாங்கள் தேர்தல் வன்முறைகளை கடுமையாக எதிர்ப்பவர்கள். வன்முறையூடாக அல்லது பயமுறுத்தல் ஊடாக வெற்றியடைய முடியுமாயின் இப்போது ஆட்சியில் இருக்க வேண்டியது ஐ.தே.க வே!. ஆனால் நாங்கள் தேர்தல் வன்முறைகளை எதிர்த்ததாலேயே இன்று ஆட்சியில் இருக்கிறோம் என்றார் அவர்.

### ஊவா தேர்தல் தொடர்பாக போலி பிரசாரங்கள்




சுதந்திரமான தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட அதிகளவான போலிப் பிரசாரங்களால் மற்றும் குற்றச் சாட்டுக்களால் ஊவா தேர்தல் தொடர்பாக போலியான காட்சியொன்று உருவாக்கப் பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. பல குற்றச்சாட்டுக்களை கணக்கின்றி இச் சுதந்திர அமைப்புக்கள் தெரிவித்துள்ள போதும் தற்போதுவரை வெறும் 61 முறைப்பாடுகளே காவல்துறையிடம் பதியப்பட்டுள்ளன என அச் செய்தி தெரிவிக்கின்றது.

### முள்ளந்தண்டுச் செயலிழப்பால் வருடாந்தம் 2000 பாதிப்பு



இலங்கையில் வருடாந்தம் 2000 பேர் முள்ளந்தண்டுச் செயலிழப்பால் பாதிப்படைகின்றனராம். பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் தெருக்களில் உள்ளதே இதற்குப் பிரதான காரணம் என எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்நரேந்திர பின்டோ தெரிவித்துள்ளார். நாளொன்றுக்கு 5-6 பேர் அனுமதிக்கப்படுவதுடன் இவர்களிற் பெரும்பாலானவர்கள் ஆண்கள் எனவும் அவர் தொடர்ந்தார்.

### அமெரிக்கா நோக்கி மஹிந்த

ஐ.நா வின் பொதுச்சபை அமர்வுகளில் கலந்துகொள்ளும் பொருட்டு சனாதிபதி எதிர்வரும் 22ம் திகதி அமெரிக்கா நோக்கி பயணமாகவுள்ளார். அங்கு 24ம் திகதி சனாதிபதியின் உரை இடம்பெறவுள்ளது.

## the Mirror

### தமிழ்மொழி பாகுபாடு




நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் இரண்டாவது பெரும்பான்மையாக வாழ்கின்றபோதும், நுவரெலியா நகரத்தில் பொருத்தப்பட்டுள்ள வீதி பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி மூன்றாம் இடத்திலேயே இருக்கின்றது.

இதேவேளை, தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் செறிந்து வாழ்கின்ற யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழியே முதலிடத்திலும், கொழும்பு உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள வீதி பெயர்ப்பலகைகளில் தமிழ்மொழி இரண்டாம் இடத்திலும் இருக்கின்றது.

### ஆர்ப்பாட்டம் - சட்ட மாணவர்கள்

சட்டக்கல்லூரியின் இறுதிப் பரீட்சையை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் நடத்தக்கோரி அகில இலங்கை சட்ட மாணவர் இயக்கம் கோரிக்கை விடுத்து, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் போரைப் பற்றிய மூன்றாவது கதைக் கூற்று

அரசியல் ஆய்வு

சாந்தி சச்சிதானந்தம் (www.Globaltamil.com)



கடந்த வாரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாடு நடைபெற்றது. அதே தலைமைத்துவம், அதே அறைகூவல்கள். அரசாங்கம் தமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல் போனால் அடுத்த வருடம் ஜனவரி முதல் சாத்வீகப் போராட்டம் என சூளுரைத்திருக்கின்றார் கட்சியின் பதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு.மாவை சேனாதிராஜா. மோடி சொன்னாலும் என்ன சொல்லாவிட்டாலும் என்ன ராஜபக்ஸ அரசு இப்பொழுது போகும் வழியில்தான் போய்க்கொண்டிருக்கும். இந்த நிலையில் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஜனவரி மாதம் வரை காத்திருக்க வேண்டுமா? ஒருவிதமான வேலைத்திட்டமும் இன்றி வெற்று வார்த்தைகளுடன் எமது கட்சிகள் தொடர்வதும், வேறு வழியின்றி அவற்றுக்கு நாம் வாக்களிப்பதுமாக தமிழ் மக்களது அரசியல் வாழ்க்கை தொடரப் போகின்றது. இதில் பேச ஒன்றுமில்லை என்பதால் சமீபத்தில் தென்னிலங்கையின் புத்தி ஜீவிகள் சிலர் ஒன்றிணைந்து வன்னி யுத்தத்தினைப் பற்றி வெளியிட்ட தமது "மூன்றாவது கதைக்கூற்று" (the Third Narrative) தொடர்பாக எழுதலாம் என்று நினைக்கின்றேன்.

"பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என பாரதி சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப வரலாற்றில் நிறுவப்படுவதை நாம் காண்கின்றோம். ஆய்வுகளும் அறிவுருவாக்கமும் நாம் நினைப்பதைப் போன்று நடுநிலையான நடவடிக்கைகளேயல்ல. ஒவ்வொரு ஆய்வும் அதன் மூலம் வெளியிடப்படும் புதிய கோட்பாடுகளும் எல்லாமே ஒரு குறிப்பிட்ட கருத்தியலினை அடிப்படையாக வைத்து புனையப்பட்டவைதான். இந்தக் கண்ணோட்டத்துடன் தான் இப்பொழுது மார்கா நிறுவனமும் மனிதாபிமான அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து வெளியிட்டிருக்கும் ஓர் கோட்பாட்டுப் பத்திரத்தினையும் நாம் நோக்க வேண்டும். மார்கா நிறுவனம் கலாநிதி கொட்:ப்றி குணதிலக அவர்களால் 1970களில் நிறுவப்பட்ட இலங்கையின் முதன்மையானதோர் ஆய்வு நிறுவனமாகும். மனிதாபிமான அமைப்புக்களின் ஒன்றியமானது 1990களில் யுத்தப் பிரதேசங்களில் பணி புரிந்த தொண்டரமைப்புக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக தாபிக்கப்பட்ட வலையமைப்பாகும். இந்த இரு அமைப்புக்களும் தமது ஆரம்ப காலந்தொடங்கி இலங்கையின் மனித உரிமைகள் மீறல் பற்றிய விடயங்களையும் மனிதாபிமானப் பணிகளின் பிரச்சனை பற்றியும் பிரஸ்தாபித்து வந்துள்ளன. மனித உரிமைகள் பற்றிப் பேசி வந்த இவற்றின் நிலைப்பாடு இன்று தலைகீழாக மாறியிருப்பதைக் காண்கின்றோம்.

Issues of Truth and Accountability: Narrative iii on the last stages of the war in Sri Lanka (உண்மையும் கணக்குக் காட்டலும்: இலங்கையின் யுத்தத்தின் கடைசி நாட்களைப் பற்றிய மூன்றாவது கதைக்கூற்று) என தலைப்பிடப் பட்டிருக்கும் இந்த ஆய்வு ஆவணம், அதன் தலைப்பில் உள்ளது போலவே யுத்தத்தின் கடைசி நாட்களைப் பற்றிய அரசாங்கத்தின் கூற்று ஒருபுறமிருக்க, அதனைப் பற்றி தமிழ் தேசிய ஆதரவாளர்களின் கூற்று மறுபுறமிருக்க, மூன்றாவது கதைக்கூற்றினை தான் முன்வைப்பதாக அமைந்துள்ளது. இலங்கை அரசின் மீதான விசாரணையை முன்னிட்டு அதனை மறுதலிப்பதாகவே இந்த ஆவணத்தினை வெளியிட்டி ருக்கின்றனர்.

பல மனித உரிமைகள் அமைப்புக்களின் அறிக்கைகள் கோடுகாட்டியிருந்தபோதும் முதல் முக்கியமாக அது ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நிறுவப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையினை எடுத்துக்கொள்கின்றது. இக்குழுவின் அறிக்கையானது அரசாங்கம் யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தினைக் கேள்விக்குள்ளாக்கவில்லை, மாறாக, விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கம் மட்டுமல்லாது தமிழ் மக்களையும் அழிக்கும் நோக்கத்துடனும் இந்த யுத்தம் நடத்தப்பட்டது எனக் குற்றம் சாட்டுகின்றது. அதற்கான சாட்சியங்களாக பாதுகாப்பு வலயங்களின் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதையும் அவர்களுக்கு உணவு மற்றும் வைத்திய வசதிகள் நிராகரிக்கப்பட்டதையும் அப்பாவிப் பொதுமக்கள் இறந்ததனையும் சுட்டிக்காட்டுகின்றது என இந்த ஆவணம் தெரிவிக்கின்றது. அது முன்வைத்திருக்கும் முக்கியமான கருத்துக்களும் கண்ணோட்டங்களும் இதன் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சர்வதேச சமூகம் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தினை ஒருபோதும் எதிர்த்ததில்லை என்பதுதான் இங்கு தெரிவிக்கப்படும் முதல் வாதமாகும். அதற்கான சாட்சியங்கள் அமெரிக்க இராஜாங்க உயரதிகாரிகளின் கூற்றுக்கள் உட்பட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கூற்றுக்களிலிருந்தும் பெறப்படுகின்றன. அடுத்து ஐ.நா ஸ்தாபனங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தமது கடமைகளை உறுதியுடன் மேற்கொள்ளவில்லை என்பதைக் காட்டுகின்றது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்னால் தமது வாகனங்களை நிறுத்தக் கூடாதென்று இந்நிறுவனங்கள் தடை விதித்தும் விடுதலைப் புலிகள் அவ்வாறு செய்தது இதற்கு அத்தாட்சியாகக் காட்டப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக, அப்பாவிப் பொதுமக்கள் யாவர் என்பதைப் பற்றிய தெளிவான வரைவிலக்கணம் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களில் காணப்படாததைப் பற்றிப் பிரஸ்தாபிக்கின்றது. விடுதலைப்புலிகளுடன் முள்ளிவாய்க்கால்வரை சென்ற மக்களில் அனேகம் பேர் அவர்களுடைய ஆதரவாளர்கள் மட்டுமன்றி தமக்கும் புலிகளுக்கும் பங்கர் வெட்டும் வேலையில் ஈடுபட்டவர்கள். இத்தகைய யுத்தச் செயல்களில் ஈடுபட்டவர்களை அப்பாவிப் பொது மக்கள் எனக் கூற முடியாது என்கின்றது. அத்துடன், சர்வதேசத்தின் தலையீடு பெறப்படும் என்கின்ற நம்பிக்கையில் இவர்கள் சென்றதாகக்கூறுகின்றது.

அடுத்ததாக, பாதுகாப்பு வலயங்களில் தமது போர்த் தளபாடங்களை விடுதலைப் புலிகள் வைத்துக்கொண்டதும், அவற்றிற்குப் பாதுகாப்பாக பொது மக்களை நிறுத்திக் கொண்டதும், அங்கிருந்து கொண்டே அரச இராணுவத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டதும் காட்டப்பட்டு அவ்வகையான வலயங்களில் தாக்குதல் மேற்கொள்வது தவிர்க்க முடியாத செயலென்றும் நியாயப்படுத்துகின்றது. உணவு மருத்துவ வசதிகளும் 2009 ஜனவரி வரை பூரணமாகக் கிடைத்ததென்றும் அதன் பின்பு பாதுகாப்பு வலயங்களாக மக்கள் தேடிப்போன நிலைமையில்தான் மக்களுக்கு இவை கிட்டாமல் போனதென்றும் கூறுகின்றது. மேலும் எத்தனை பொது மக்கள் இறந்தனர் என்பதை வைத்துக்கொண்டு அரசின் நோக்கங்களைக் கணிக்க முடியாதென்று வாதிடுகின்றது இந்த ஆவணம். அரசின் நோக்கம் பிச்சினையின் அளவைப் (proportionality) பொறுத்தே இருக்க முடியும் என்கின்றது. கிழக்கு மாகாணத்தை மிகச் சிறிய சேதங்களுடன் விடுவித்த அதே இராணுவம் வடக்கில் மட்டும் தமிழ் மக்களை அழிக்கும் எண்ணம் கொண்டதா எனக் கேள்வி எழுப்புகின்றது. விடுதலைப் புலிகளை அறுதியும் இறுதியுமாக அழிக்க வேண்டுமானால் அவர்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திய மக்களும் அழியத்தான் செய்வார்கள் எனச் சொல்லாமல் சொல்கின்றது இது. இந்தப் பின்னணியில், விடுதலைப் புலிகள் இருக்கின்றார்களோ இல்லையோ அவர்களின் கணக்குக் காட்டல் பற்றிய விசாரணையை நடத்தியே ஆகவேண்டும் என்கின்றது.

இதனால், முள்ளிவாய்க்காலினை அடைய முன்னமேயே பொது மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்தெடுப்பதற்கு அரசாங்கமும் சர்வதேச சமூகமும் எத்தனித்திருக்கக்கூடாதா என வினவுகின்றது இந்த ஆவணம். இந்தப் பின்னணியில், ஐநா ஸ்தாபனமும் தன் பங்குக்கு கணக்குக் காட்ட வேண்டும் என்கின்றது. ஓர் பயங்கரமான யுத்தத்தின் சூழலில் உறுதியான மூலோபாயத்துடன் தீர்மானம் எடுக்கக்கூடியவர்களை பணிக்கு அமர்த்தினார்களாவென கேட்கின்றது. ஒவ்வொரு சமயமும் கவனமாக ஒருபக்கத்தையும் சாடாமற் தமது வேலையை எடுத்துக்கொண்டு போகின்ற நோக்கிலேயே அந்த அதிகாரிகள் செயற்பட்டார்களேயன்றி இறப்புக்களையும் அழிவுகளையும் தவிர்க்க வேண்டும் என்கின்ற நோக்கில் அவர்கள் செயற்படவில்லை என்கின்றது.

மொத்தத்தில் நோக்கினால் சர்வதேச விசாரணையையும் அதன் பயனாக எழக்கூடிய குற்றவியல் விசாரணையையும் சட்ட ரீதியான வாதங்கள் மூலம் எவ்வாறு எதிர்க்கலாம் என்பதற்கான அடித்தளங்களை இந்த ஆவணம் போடுகின்றது எனக் கூறலாம். சரணடைந்த பொதுமக்கள் கொலை செய்யப்படுகின்ற சனல் 4 காட்சிகள் ஒருபுறமிருக்க, யுத்தத்திற்குப் பின்னரான அரசின் இனவழிப்பு நடவடிக்கைகள் மறுபுறமிருக்க, இது எம்மையெல்லாம் முட்டாள்களாக்கும் செயற்பாடு என்றால் மிகையில்லை. மாறாக, ஓர் அரசு தனது குடிமக்கள் மீதே யுத்தத்தினைக் கட்டவிழ்க்க முடியுமா, தம்மைத் தாமே பாதுகாப்பதற்கு பொதுமக்களுக்கு உரிமையில்லையா போன்ற பல கேள்விகளை இது தொடர்பாக நாம் எழுப்ப முடியும். இந்த ஆவணம் முன்வைக்கும் வாதங்கள் தற்போது அரசு நியமித்திருக்கும் நிபுணர் குழுவினால் கருதப்படுமா, அது ஒரு மாற்று கதைக்கூற்றாக (counter narrative) பிரபலப்படுத்தப் படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அடி என்னடி உலகம் அதில் எத்தனை கலகம்

# ஒரு வடகிழக்கு கை ஓசை – இரோம் சர்மிளா

நவம்பர் 26, 2011ல் இரோம் சர்மிளா சானுவை அவர் சிறையில் இருக்கும் ஜவஹர்லால் மருத்துவமனையின் A4 அறையில் பார்க்க முடிந்தது. அந்த உரிமை பெறுவதற்கு மணிப்பூர் முதன்மை அதிகாரி முதல் பலருக்கு மனு செய்து பல தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. இரோம் சர்மிளா ஒரு தீவிரவாதியோ, ஒரு கொலையாளியோ அல்ல. அவர் செய்த குற்றம்? ஆயுதப்படை சிறப்பு அதிகாரம் (Armed Forces Special Powers Act, AFSPA, 1958) என்ற சட்டத்தை விலக்கக்கோரி உண்ணாநிலை மேற்கொண்டது. இதற்காக அவர் தற்கொலை முயற்சி (IPC 309) பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார். அவருக்கு மூக்கின் வழியாக உணவு கொடுக்க ஆரம்பித்தனர். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அவரை மணிப்பூர் போலீஸ் மாஜிஸ்திரேட் முன் அழைத்துச் செல்கிறது. அவர் தனது உண்ணா நிலையை AFSPA வை விலக்கினால்தான் கை விடுவேன் என்று கூற மறுபடியும் மருத்துவமனையில் இருக்கும் சிறை அறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். இந்த சட்டத்தின் கீழ் ஒரு ஆண்டுக்கு மேல் சிறைப்படுத்த முடியாததால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு நாள் வெளியில் விட்டு மீண்டும் சிறையில் தள்ளப்படுகிறார். இந்த ஏமாற்று வேலை பதினான்கு ஆண்டுகளாக நடந்து வருகிறது. மகாத்மா காந்தியின் சத்யாகிரகப் போராட்டத்தின் இறுதி வடிவம் உண்ணாவிரதம். இதை அவர் அன்று ஆங்கிலேய அரசிடம் வெற்றிகரமாகக் கையாண்டார். நல்ல வேளையாக அவர் சுதந்திர இந்திய அரசை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்க நேரவில்லை. அப்படி நேர்ந்திருந்தால் இந்திய அரசு அவரை இதே நிலைக்குக் கொண்டு வந்திருக்கும். அவர் ஆர் எஸ் எஸ் கொலையாளிகளால் படு கொலை செய்யப்படாமல் இருந்திருந்தால் அவரும் இந்த ஜனநாயகத்தை விழுங்கும் கொடூரமான AFSPA சட்டத்தை, இரோம் சர்மிளாவைப்போல் விடாமல் எதிர்த்திருப்பார்.



நவம்பர் 2, 2000ல் 27 வயது இளம் பெண்ணாக இருந்த இரோம் சர்மிளா தொடங்கிய உண்ணாவிரதப் போராட்டம் என்ற தன்னிச்சையான முடிவுக்குப்பின்னால் AFSPA என்ற போர்வையில் இந்திய இராணுவம் செய்த கொலைகளும் கற்பழிப்புகளும் உள்ளன. மணிப்பூர் மாநிலத்தில் 1958ல் இருந்தே இந்த சட்டம் அமுலில் உள்ளது. 1972ல் இரோம் சர்மிளா பிறந்த போது இந்தச் சட்டத்தின் வயது பதினான்கு. மணிப்பூரின் மகளிர் முன்னரே மன்னராட்சியையும், ஆங்கிலேய ஆட்சியையும் எதிர்த்து இயக்கங்கள் நடத்தியுள்ளனர். சர்மிளாவின் தாயும் AFSPA சட்டத்தை எதிர்த்துள்ளார். அந்த பரம்பரையில் பிறந்த சர்மிளா கவிதை உள்ளம் படைத்த ஒரு சமூக அரசியல் போராளியின் கண்ணோட்டம் உடையவர். AFSPA வை ஆய்வு செய்ய அரசு அமைத்த குழுவுடன் பல இடங்களுக்குச் சென்று இராணுவ அத்துமீறல்கள் குறித்து அறிந்தவர். தலை நகர் இம்பாலுக்கு வெளியே உள்ள மலோம் என்ற இடத்தில் பேருந்து நிற்குமிடத்தில் காத்திருந்த சிறுவர் முதல் மூதாட்டி வரை பத்து பேரை காலை வேளையில் இந்திய இராணுவத்தின் அஸ்ஸாம் ரைபிள்ஸ் சுட்டுத்தள்ளியது. வாரந்தோறும் வியாழக்கிழமை உண்ணா நோன்பிருக்கும் வழக்கம் கொண்ட சர்மிளா, அந்த பேருந்து நிலையத்திற்குச் சென்று தனது உண்ணாவிரதத்தை, தன் தாயின் ஒப்புதலுடன், AFSPA வை விலக்கும் வரை தொடருவேன் என்று அறிவித்துத் தனி நபராகத் தொடங்கினார். இன்று வரை அப்படியே தனியாகதான் இருக்கிறார். எந்த அரசியல் கட்சியும், இயக்கமும் அவருக்குத் துணை நின்று AFSPA வை விலக்க இன்று வரை செயல் படவில்லை. அவரது போராட்டத்தைப் பல என் ஜி ஓக்கள் பயன்படுத்திப் பேரும் புகழும் அடைந்தன. பல தேர்தல்கள் வந்து சென்று விட்டன. AFSPA வை விலக்கக் கோரி எந்த அரசியல் கட்சியும் செயல் படவில்லை. வேடிக்கை என்னவென்றால் எந்த காங்கிரஸ் அரசு AFSPA சட்டத்தைக் கொண்டு வந்ததோ அதே கட்சி இரோம் சர்மிளா தேர்தலில் போட்டியிட 2014ல் சீட் கொடுக்க முன் வந்தது. ஏனெனில் ஆம் ஆத்மி கட்சியும், திரிணமுல் காங்கிரசும் சீட் கொடுக்க முன் வந்ததால். ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை, கைதி என்ற காரணத்தால் கொடுக்கப்படவில்லை.

AFSPA ஏன் தொடருகிறது?

1958ல் AFSPA மணிப்பூர் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் கொண்டு வரப்பட்டது. பிறகு 1972ல் வடகிழக்கில் உள்ள ஐந்து மாநிலங்களிலும் அது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1990ல் ஜம்மு காஷ்மீரிலும் அது திணிக்கப்பட்டது. ஆறு பிரிவுகளைக் கொண்ட இந்த சட்டம் ஆங்கிலேய ஆட்சியில் 1942ல் காந்தி தொடங்கிய 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தடுக்கக் கொண்டு வரப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த AFSPAவின் கீழ் இந்திய இராணுவம் யாரை வேண்டுமானாலும் சுடலாம் கொல்லலாம் கைது செய்யலாம். எந்த முன்னறிவிப்பும், ஆதாரமும் இல்லாமல் எந்த வீட்டிலும் நுழைந்து தேடலாம். AFSPA சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் இராணுவ அதிகாரிகள் மீது இந்திய சட்டத்தின் கீழ் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.



இந்த சட்டம் பிரிவினைவாதத்தைத் தடுக்கவும், தீவிரவாதிகளை ஒடுக்கவும் உதவும் என்று கூறி இந்தியப் பாராளுமன்றத்தின் எதிர்ப்புகளைத் தாண்டிக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டு வரப்படும் போது வடகிழக்கில் இரண்டு அல்லது மூன்று பிரிவினைக் கும்பல்கள் இருந்தன. இன்று நாற்பதுக்கும் மேற்பட்ட கும்பல்கள் வளர்ந்துள்ளன. அப்பாவி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஊழல் தலை விரித்து ஆடுகிறது. இதில் பயன் அடைவது அங்கு ஆட்சி செய்யும் அரசியல்வாதிகளும் அவர்களுடன் தொடர்புடையவர்களும்தான். 2005ல் அரசால் நியமிக்கப்பட்ட ஜீவன் ரெட்டி குழு AFSPAவை விலக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால் இன்று வரை அதைப் பாராளுமன்றத்தில் அமுல் படுத்தவில்லை.

டாக்.எஸ்.கிருஷ்ணசாமி (www.mattru.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் ஒரு சொந்தமா?? ஏன் இப்படி!

...நாட்டு நடப்பு...

அன்று அவர்களது திருமணம். மிக எளிமையாக இடம்பெற்றது. அது அவர்களது இரண்டாவது திருமணம். சிலருக்கு வாழ் நாளில் ஒரு திருமணம். சிலருக்கு பல திருமணங்கள். அநேகமாக விதவையானவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் ஆகக்கூடிய பண வசதிகளை கொண்டவர்கள் ஆகியோர் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை திருமணம் புரிந்தவர்கள் எனும் பகுதிக்குள் உட்படமாட்டார்கள். சிலரிடம் சாப்பிடக் கூட பணமிருக்காது. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை தங்கள் வாழ்க்கைத் துணையாக வைத்துக் கொள்வார்கள். அவ்விதமானவர்கள் சின்னவீடு என்றழைப்பது வழமை.

மேலும் விதவையாகியவர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், பணம் படைத்தவர்கள் ஆகியோர்களில் அநேகமாக எல்லோரும் அவ்விதம் மீண்டும் திருமணங்களை புரிபவர்களளல்ல. அவ்வாறான திருமணங்களுக்கு விருப்பமானவர்கள் மட்டுமே மறு திருமணங்களை புரிந்து கொள்கிறார்கள். தங்களால் தனித்து வாழ முடியும் என்ற திடமான துணிவுள்ளவர்கள் மறு திருமணத்தை விரும்ப மாட்டார்கள்.

அன்று மிக எளிமையாக இடம்பெற்ற திருமணத்திற்குரிய அந்த தம்பதிகள், தங்களது முன்னைய வாழ்க்கை துணைகளை விவாகரத்து செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். அவர்கள் இருளின் வாழ்க்கையில் இரண்டாவது திருமணத்திற்காக ஏற்கனவே இறைவன் எழுதி வைத்துவிட்டான். அதை எவராலும் தடுக்க முடியாது.

இருப்பினும் அந்த தம்பதிகளின் முன்னைய திருமணங்கள் ஊடாக எந்தவொரு குழந்தைச் செல்வங்களும் இருவருக்கும் இல்லாதிருந்தமை அவர்களது இரண்டாவது திருமணத்திற்கு தேவையற்ற தடைகளை தோற்றுவிக்கவில்லை. அவ்விதம் இரண்டு பேருக்கும் ஏற்கனவே குழந்தைகள் இருந்திருந்தால் அது எதிர்காலத்தில் பல சிக்கல்களை மிக இலகுவாக தோற்றுவிக்கும். ஏதோ அந்த விடயத்தில் அந்த தம்பதிகள் இருவரும் தப்பித்துக் கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு தெளிவாக புரிந்து கொண்டதன் பின்னரே அந்த திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். மேலும் தங்களது கடந்தகால கசப்பான குடும்ப வாழ்க்கையை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்து கொண்டனர். அவர்களது புதிய குடும்ப வாழ்க்கையை மிக குதூகலமாக ஆரம்பித்தனர். விவாகரத்தை இருவரும்



சட்டரீதியாக பெற்ற பின்னரே அந்த திருமணத்தை செய்து கொண்டதால், முன்னையவர்களால் அவர்களுக்கு எந்தவித இடையூறுகளும் இருக்கவில்லை.

கணவர் கைநிறைய சம்பாதிப்பதால் அக் குடும்பத்தில் எந்தவித பொருளாதாரக் கஷ்டங்களும்எழ அங்கு வாய்ப்பிருக்கவில்லை.

பெற்றோர்களிடமோ, சகோதரர்களிடமோ உற்றார் உறவினர்களிடமோ எதையும் அந்த தம்பதிகள் கேட்டுச் சொல்ல இருக்கவில்லை. ஏனென்றால் அவர் ஒரு திணைக்களத்தின் உயர் அதிகாரி. தனது மனைவியின் தாயார் சீதனமாகக் கொடுத்த காணியில் மிக அழகான வீடொன்றை கட்டினார் கணவர். அது சகல வசதிகளையும் கொண்ட ஒரு சொகுசு வீடு. அதுபோன்ற பெரிய வீடொன்று அங்கு இல்லாதது அத்தம்பதியினருக்கு அப்பகுதியில் பெரும் மதிப்பை கொடுத்தது.

நாம் இருவரும் ஏன் முன்பே சந்தித்திருக்கக் கூடாது. அப்படிச் சந்தித்திருந்தால் தற்பொழுது இருக்கும் நிலையை விட இன்னும் வசதியாக இருந்திருக்கலாம். என அத் தம்பதியினர் தமக்குள்ளே அடிக்கடி பேசிக் கொள்ளத் தவறவில்லை.

ஆனாலும் எம்மை படைத்த இறைவனுக்கு மாத்திரம் தான் தெரியும் எவருக்கு எதை கொடுக்கவேண்டும். எப்பொழுது கொடுக்க வேண்டுமென்று. நாம் அவசரப்பட்டால் எதுவும் நாம் நினைக்கின்ற வேளையில் கிடைக்காது. அதையிட்டு நாம் கவலைப்படுவது அர்த்த மற்றதாகும். கிடைக்க வேண்டிய நேரத்தில் எமக்கு தேவையானவை கிடைக்கவில்லையென இறைவனை திட்டித்தீர்ப்பது அனாவசியமான செயலாகும். எவர் எவருக்கு என்னென்ன தேவை அதை எப்ப கொடுக்கலாம், எப்படி கொடுக்கலாம் என தீர்மானிப்பவன் இறைவனே. ஆகவே நாம் பொறுமையான இருப்பதே சிறந்தது.

அத் தம்பதிகள் இருவரும் ஏதோ புதிதாக திருமணமாகி குடித்தனம் நடத்துகின்ற மாதிரி ஒருவருக்கொருவர் மிகவும் அந்நியோன்யமாகவும், அன்பாகவும் அப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். அங்குள்ள சகலரும் அவர்களின் நடவடிக்கைகளை கவனித்து பொறாமை கொள்ளத் தவறவில்லை.

'புதிய இளம் தம்பதிகள் கூட அவர்கள் குடும்பம் நடத்துவது போன்று நடாத்த மாட்டார்கள்' என அப்பிரதேச மக்கள் ஆளுக்காள் பேசிக்கொள்ளவும் தவறவில்லை. மேலும் அக்கணவர் அங்குள்ள மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அவரின் சேவைத் திறனை பாராட்டி அம்மாகாண ஆளனர் அவரை ஜப்பானில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொள்வதற்காக புலமை பரிசு மூலம் அங்கு அனுப்பி வைத்தார். அதுமாத்திரமல்ல சுமார் ஆறமாத காலம் அங்குள்ள அரச நிறுவனமொன்றில் கடமையாற்றும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. ஜப்பான் அரசு அங்கு கடமையாற்றுவதற்காக அந்த நாட்டு பெறுமதி கொண்ட பணத்தின் மூலம் உரிய வேதனத்தையும் செலுத்தி வந்தது. அவர் சொந்த நாட்டில் பெற்ற வேதனத்தை விட அது மும்மடங்கு அதிகமானதாகும்.

ஜப்பான் நாட்டில் கூட அவர் மிகவும் விசுவாசமாக உழைத்ததை பாராட்டி மேலும் இருவருட ஒப்பந்த அடிப்படையில் அந்த அரசு அங்கு கடமையாற்ற இடமளித்திருந்தது. அது மாத்திரமல்ல அவருடன் அவரின் மனைவியும் அங்கு தங்கி வாழ விசேட அனுமதியை வழங்கியிருந்தது ஜப்பான் அரசு.

அதனால் அவர் தனது மனைவி சகிதம் மீண்டும் ஜப்பானுக்குச் சென்றார். அந்த இருவருட காலத்தினுள் அவர்களுக்கு ஓர் அழகான ஆண்குழந்தையொன்று பிறந்தது. இருவருட கால இறுதியில் மீண்டும் தாய் நாட்டிற்கு வந்து தனது முன்னைய தியைக்களத்தில் மீளப் பணியாற்றத் தொடங்கினார்.

அவர் ஜப்பானில் பெற்ற சமூக சேவைகள் தொடர்பான அனுபவங்களையும், புதிய தொழில்நுட்பங்களையும், அம்மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலுள்ள உரிய அலுவலர்களுக்கு கற்பிக்கும்படி ஆளுனரால் அவர் பணிக்கப்பட்டார்.

ஆளுனரின் பணிப்புரையின் பேரில் அவர் தனது திணைக்களத்திற்குரிய அலுவலர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு போதிய அறிவை பெற்றுக் கொடுத்தார். ஒரு தடவை அம்பாறை மாவட்டத்திலுள்ள தமன எனும் பிரதேசத்திற்கு தனது கெப் வாகனத்தில் சென்று கொண்டிருந்த பொழுது திடீரென மிகப் பெரிய பார ஊர்தியுடன் மோதியதால் அவர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

விசேட விமானம் மூலம் அவரை கொழும்புக்கு கொண்டு செல்லும் போது இடையில் அவர் காலமாகிவிட்டார். அவர் தனது மனைவியையும் தனது வாரிசையும் இந்த உலகத்தில் விட்டு அகன்றாலும் பல தலைமுறைகளுக்கு தேவையான சொத்துக்களை தனது மனைவியின் பேரில் சேர்த்து வைத்திருந்தார்.

அவர் இறந்த பின் மனைவியின் தாயாரும், இளைய சகோதரர் ஒருவரும் அவரின் மனைவிக்கு தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தனர். எப்படியும் அவர் கட்டிய அந்த சொகுசு வீட்டை அபகரிக்க திட்டம் தீட்டினர். அதனால் அவரின் மனைவியையும் குழந்தையையும் அந்த வீட்டில் இருந்து துரத்துவதற்கும் பல சூழ்ச்சிகளை செய்தனர்.

அயலவர்கள் அவர்களின் குடும்ப விடயத்தில் தலையிடக் கூடாது என ஓரமாக இருந்து கொண்டாலும் தாயாரும், இளைய சகோதரரும் நடந்து கொள்ளும் முறையை மிக வெளிப்படையாகவே எதிர்த்தனர்.

அந்த தாயாரே விதவைக் கோலத்தில் இருக்கும் தனது மகளையும், பேரனையும் அங்கிருந்து துரத்துவதிலே மிகவும் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு வந்தார். உண்மையில் தனது மகளுக்கு அந்தக் காணியை சீதனமாக அவர் கொடுத்தாலும் சட்டபூர்வமாக அது ஆவணமயப் படுத்தப் படாததால் அது அவர்களின் தவறான உரிமைக் கோரலுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

கணவனை இழந்த ஒரு அபலைப் பெண்ணுக்கு உதவுவதை தவிர்த்து அவருக்கு தொந்தரவு கொடுப்பதை யார்தான் அனுமதிப்பார்கள். அக்கணவன் உயிருடன் இருந்த காலத்தில் இன்று எதிர்த்து நிற்பவர்கள் வேண்டியதை அனுபவித்து வந்தார்கள். அவரிடமிருந்து இலட்சக்கணக்கான பணத்தைக் கூட உபகாரமாகப் பெற்றுக்கொண்டு விட்டு இன்று மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்வதை அந்த இறைவன் கூட பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்.



மேலும் அந்த இறைவனின் உருவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி ஒருவர் அந்த அபலைக்கு நீதி பெற்றுத் தர முன்வந்தார். மாவட்ட நீதிமன்றில் அந்த கருணையுள்ளமற்ற தாயாருக்கும், கபட நோக்கம் கொண்ட இளம் சகோதரனுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்தார்.

நீதி தேவதை தனது இருகண்களையும் கறுப்புத் துணியால் இறுக்கிக் கட்டிக் கொண்டாலும் தனது இரு காதுகளாலும் நியாயத்தைக் கேட்டு சரியான தீர்ப்பு வழங்க மாட்டாளா என்ன?

**- பாலையூற்றான் -**




## ஏப்படி முடியுது?

பிரித்தானியாவின் பேருந்து ஓட்டுனர் ஒருவர் 9 பெண்களை மணந்து 26 குழந்தைகள் பெற்றெடுத்து பிரபலமான தந்தையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். இதில் 8 முறை திருமணம் செய்ததோடு அவர்கள் மூலம் அடுத்தடுத்து 25 குழந்தைகளை பெற்றுள்ளார். மேலும், 17 மற்றும் 18 நூற்றாண்டில் மோராகோவின் அரசராக இருந்த இஸ்மாயில் ஐபின் சரி.்.ப் என்பவர் 525 ஆண் குழந்தைகளும், 342 பெண் குழந்தைகளும் பெற்று உலகில் அதிக குழந்தைகள் பெற்றெடுத்த தந்தை என்று சாதனை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



## திருடனால் பிறந்த குழந்தை



அமெரிக்காவில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் கடையில் வாங்கிய பொருட்களை தனது காரில் ஏற்றிக் கொண்டிருந்ததை பார்த்த கள்ளன் ஒருவன், உடனே அந்த பெண்ணின் கையில் இருந்த பர்ஸை பறித்துக் கொண்டு ஓடியுள்ளார். உடனே அந்த கர்ப்பிணி அவனை துரத்திச் சென்றபோது, அவன் கர்ப்பிணி என்றும் பாராமல் அந்த பெண்ணை பிடித்து கீழே தள்ளியுள்ளார். இந்த சம்பவம் நடந்த சில மணிநேரத்தில் அந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்துள்ளது.

## பாரம்பரியம்



இந்தோனேஷியாவின் செலும்பிங் கிராமத்தில் இறந்த முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தும் குசாபா பூசே என்ற விநோத விழா நடைபெற்றுள்ளது. இதில் ஆண்கள் விநோதமாக ஆடை அணிந்து அணிவகுத்து நடந்து சென்றனர். ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறும் இந்த விழாவில் ஆண்கள் நெருப்புகளை மூட்டி பாரம்பரிய நடனமான கத்திகளை வைத்து ஆடும் கெரிஸ் நடனம் ஆடினர். இந்த விழாவில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் கலந்து கொண்டனர். இந்த விழாவின் போது சில ஆண்கள் மிகவும் ஆழ்ந்த நிலைக்கு சென்றதால் கத்திகளை தங்களது உடம்பில் குத்தி கொண்டுள்ளனர்.

## இதற்கு துணிவிருந்தால்! வாழ்ந்திருக்கலாமே!!

தாய்லாந்தில் உள்ள 65 வயது பெண் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன் அங்குள்ள ஒரு மிருகக்காட்சி சாலையில் 1000க்கும் மேல் முதலைகள் இருக்கும் ஒரு குளத்தில் விழுந்தார். அதில் இருந்த முதலைகள் அவரை கடித்து குதறிய பயங்கரமான காட்சியை கண்டு மிருகக்காட்சி சாலைக்கு வந்தவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## இதற்கு சும்மாவே இருந்திருக்கலாமே

கொலம்பிய நாட்டில் சமீபத்தில் ஒரு சைக்கிள் போட்டி நடந்தது. இந்த போட்டிக்கு கலந்து கொள்ள வந்திருந்த சைக்கிள் வீராங்கனைகளின் புதிய உடைகளை பார்த்து பார்வையாளர்கள் அதிர்ந்துவிட்டனர். காரணம் அந்த வீராங்கனைகளின் பிறப்புறுப்புகள் வெளியே தெரியும் வண்ணம் அந்த உடைகள் அமைக்கப்பட்டிருந்ததுதான். ஆனால் அந்த உடையின் டிசைன் செய்தவர் ஸ்கின் கலரின் அவ்வாறு டிசைன் செய்திருந்தார் என்பது பலருக்கு பின்னர்தான் தெரிந்தது.

## மறையும் தேவாலயம்

பெல்ஜியத்தில் உள்ள லிம்பெர்க் (டுஐஅடிநசப) என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அந்த தேவாலயம், பார்ப்பதற்கு பழைய தேவாலயம் போன்றே காட்சியளிக்கிறது. இந்த தேவாலயம் 2000 உருக்கு தகடுகளால் 100 அடுக்குகளில் கட்டப்பட்டுள்ளது. சில கோணங்களில் பழைய தேவாலயம் போன்றே காட்சி அளிக்கும் இந்த கட்டிடம், சற்று வேறு கோணத்தில் அதனருகே செல்ல செல்ல நம் கண்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைய தொடங்குவதோடு சிலமணித்துளிகளில் முற்றிலுமாக மறைந்துவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லம்மாள்

## தொடர்கதை

புதுமைப்பித்தன்

செல்லம்மாளுக்கு அப்பொழுதுதான் மூச்சு ஒடுங்கியது. நாடியும் அடங்கியது. செல்லம்மாள் பெயரற்ற வெற்றுடம்பு ஆனாள். அதாவது பதியின் முன்னிலையிலே. உற்றார் உறவினருக்கு ஐந்நூறு அறுநூறு மைல் தூரத்திலே. பட்டணத்துத் தனிமையிலே மாண்டு போனாள்.

நெற்றியில் வியர்வை ஆறாகப் பொழிந்து கொண்டிருந்த பிரமநாயகம் பிள்ளை. கையிலிருந்த தவிட்டு முடிப்பைச் சற்று எட்ட வைத்துவிட்டு, செல்லம்மாளாக இருந்த அந்த உடம்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று அரைக்கண் போட்படி திறந்திருந்த இமைகளை மூடினார். அங்கொன்றும் இங்கொன்றுமாக வசமிழந்து கிடந்த கைகளை எடுத்து நெஞ்சின் மேல் மடித்து வைத்தார். இடது கால் சற்று ஒரு புறமாக மடிந்து கோணியிருந்தது. அதை நிமிர்த்தி, இரண்டு கால்களையும் சேர்த்து வைத்துக் கிடத்தினார். வாயிதழ் சற்றுத் திறந்திருந்தது. அதையும் மூடினார். செல்லம்மாள் இறந்துவிட்டாள் என்று உள்மன உணர்ச்சி இருந்ததே ஒழிய, ஸ்பரிசத்தில் அவருக்குப் புலப்படவில்லை. அப்பொழுதுதான் மூச்சு அடங்கியது.

ஒரு பெரும்பளுவை இறக்கிக் கழுத்துக்கு



ஆசவாசம் கொடுப்பது போலவே, அவரது மனசிலிருந்து பெரும்பளு இறங்கியது. சகதர்மிணியாக இருந்த ஒரு ஜன்மத்துக்குத் துன்பச் சுமை குறைந்துவிட்டது என்பதிலே அவருடைய மனசுக்கு ஒரு நிம்மதி.

அவருக்கு மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டது. சாவினைக் கண்டு அவரது மனம் நிலை குலையவில்லை. அதற்காக அவர் ஒன்றும் பந்தவினையறுத்த யோகியுமல்ல. வாழ்வின் மேடு பள்ளங்களைப் பார்த்து வளர்ந்தவர்.

பிரமநாயகம் பிள்ளை நான்காவது வாரிசு. அவரின் படிப்பினை விட அவர் தந்தை பார்த்துக் கொண்டது பட்டினி கிடக்காமல் தன் மகன் இருக்க வேண்டும் என்பதை மட்டுமே. உற்ற பருவத்தில் பிள்ளைக்குச் செல்லம்மாள் கையை பிடித்து, அம்மி மிதித்து அருந்ததி பார்க்க வைக்கும் பாக்கியம் கிடைத்தது தந்தையினால்.

பிள்ளையின் தந்தையார் காலமானதை அடுத்து குடும்பக் கடன் விவகாரத்தினால் இவருக்கு சொத்தெதுவும் கிட்டவில்லை.

கைபிடித்த செல்லம்மாளை அழைத்துக் கொண்டு கொழும்புக்குப் புறப்பட்டார். கொழும்பு அவருக்கு நிம்மதியற்ற வாழ்வைக் கொடுத்து அக்கினிப் பரீட்சை செய்தது. காணாததற்கு செல்லம்மாள் வேறு வீட்டில் அவருக்கு நிம்மதியற்ற வாழ்வைக் கொடுத்தாள். குணத்தினால் அல்ல. உடம்பினால். பிள்ளைக்கு ஒரு ஜோடி ஜீவன்கள் உடலைக் கீழே போட்டுவிடாமல் இருக்கக்கூடிய அளவு ஊதியத்துடன் ஒரு ஜவுளிக் கடையில் வேலை கிடைத்தது. இருப்பினும் செல்லம்மாளின் வியாதி அதில் பாதியைத் தின்றுவிடுவதுடன் கடன் என்ற பெயரில் வெளியிலும் படருகிறது.

பிள்ளைக்கு மனதில் எழும் தொல்லைகள் முதலில் ரணம் காட்டி, பிறகு ஆறி மரத்துப் போன வடுவாகிவிட்டன. மனஉளைச்சலும், பட்டினியும் சேர்ந்து செல்லம்மாளின் நோயைக் கூட்டியது. சிக்கனத்தை முன்னிட்டு சற்றுக் கலகலப்பு குறைந்த மின்சார வசதி இல்லாத இடத்தில் வசித்து வந்தார்கள். நடையிலேயே தன் காலத்தைப் போக்கினார்.

இப்படியாக, பிள்ளையின் பத்து வருடங்கள் கொழும்பில் காலம் கழித்துவிட்டார். அவருக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஊருக்குப் போய்விடலாமா என்றே தோணும்.

அன்று பிள்ளை அதிகாலையில் பழஞ்சோற்று மூட்டையுடன் நடைப்படியைத் தாண்டும் பொழுது செல்லம்மாளுக்கு எழுந்து நடமாட முடிந்தது. இரவு சாப்பாட்டுக்கு பிள்ளைக்குப் பிடித்த துவையலும், கறியும் வைக்கப்போவதாக ஆசையாய்ச் சொன்னாள். அதற்கு பிள்ளை 'இன்று தான் சித்தெ தலெ தூக்கி நடமாடுதெ. வீணா உடம்பெ அலெட்டிக்கிடாதே' என்று எச்சரித்துவிட்டுச் சென்றார்.

வழியில் நடந்து கொண்டிருந்த பிள்ளைக்கு தன் மனைவி நேற்று இரவு கூறியவை மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. அதாவது நெஞ்சுவலிக்கு ஒற்றடமிட்டுக் கொண்டிருக்கும் போது, வருகிற பொங்கலுக்கு வீட்டு அரிசி சாப்பிடவேணும். ஒருக்கா போய்ட்டு வரலாம். வரும் போது நெல்லிக்காய் அடையும் முருக்க வத்தலும் எடுத்துக்கிட்டு வரணும்.' என்று கூறினாள்.

அன்று, வீடு திரும்பிய தன் கணவரை வரவேற்று உணவு பரிமாறினாள் செல்லம்மாள். 'தீபாவளி வருது. உங்க பாடு கவலையில்ல: கடேயிலேயிருந்து வரும். இந்த வருஷம் எனக்கு என்னவாம்? என்று கேட்டாள். தன் சோகங்களை எல்லாம் மறந்து தன் மனைவியின் கேள்வியைக் கண்டு ஆச்சரியமுற்றார். 'அதுக்கென்ன, எதுவும் உனக்குப் பிடித்தமானதாப் பாத்து எடுத்துப் போட்டாப் போச்சு. மொதல்லே நீ எழுந்து நடமாடத் துவங்கு, பிறகு பாப்பம் இதெல்லாம்.' என்று சிரித்தார்.

வழி நெடுக அவளுக்கு வாங்கிக் கொடுக்க, என்னத்த சொல்லி முதலாளியிட்ட கடன் கேட்பது என யோசித்தபடியே நடந்தார்.

கடைக்குள் சென்றதும். இயந்திர வேலை அவரை ஓடச்செய்தது. மாலை ஐந்து மணியிருக்கும் முதலாளியிடம் போய் தனது தேவையை எடுத்து சொல்லி மாதிரி காட்டுவதற்காக மூன்று சேலைகளை பதிவு செய்து விட்டு, மீண்டும் வீடு நோக்கி நடந்தார்.

பிள்ளை மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, கதவுச் சந்துக்கிடையில் வழக்கம் போல் விரல்களை விட்டு உள்தாழை நெகிழ்த்தி உள்ளே சென்றார்.

வீட்டில் விளக்கில்லை. உறங்கி இருப்பாள், என நினைத்துக் கொண்டே நிலை மாடத்தில் இருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து அருகிலிருந்த சிமினி விளக்கை ஏற்றினார். அங்கே செல்லம்மாள் புடைவைத் துணியை விரித்து, கொடுங்கை வைத்து இடதுபுறமாக ஒருக்களித்துக் கிடந்தாள். வலதுகை பின்புறமாக விழுந்து தொய்ந்து கிடந்தது. அவள் கிடந்த நிலை தூக்கமல்ல என்பதை உணர்த்தியது. பிள்ளை குனிந்து விளக்கை முகத்துக்கு நேரே பிடித்துப் பார்த்தார். கண் ஏறச் செருகியிருந்தது. நெஞ்சில் மட்டும் சிறு துடிப்பு: சுவாசம் மெல்லிய இழை போல் ஓடிக்கொண்டிருந்தது.

நிமிர்ந்து பின்புறமாகச் சென்ற அவரது பார்வை சமையற் கட்டில் விழுந்தது. உணவெல்லாம் தயாரித்து வரிசையாக எடுத்து அடுக்கி இருந்தது. அடுப்பில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தது.

சாவகாசமாக சென்று கிணற்றில் ஜலம் மொண்டு கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டார். பின் ஒரு சுக்குத் துண்டையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு செல்லம்மாக்கு அருகில் திரும்பி வந்தார்.

கையும் காலும் ஜில்லிட்டிருந்தன. கற்பூரத் தைலத்தை உள்ளங்கையில் ஊற்றி சூடு ஏறும்படித் தேய்த்துவிட்டு கமறலான அதன் நெடியை மூக்கருகில் பிடித்தார். பிரயோசனம் இல்லை. கொதிக்கும் நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து வந்து கை, கால், நெஞ்சிலுமாக ஒற்றடமிட்டார். அதிலும் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை.

சுக்குத் துண்டை விளக்கில் கரித்துப் புகையை மூக்கருகில் பிடித்தார். இரண்டு முறை ஊதியதும், புகையை தவிர்க்கச் சிறிது தலையை அசைக்க ஆரம்பித்தாள். உடலையே அதிர வைக்கும் ஒரு பெரிய தும்மல். சிறு குழந்தை மாதிரி முனகிக் கொண்டே 'தண்ணி...' என்றாள்.

தொடரும்.. .. ..

# பெயரிடப்படாத பெண்ணின் அந்தரங்கக் கடிதம்

அன்பானவனே!

"நலமா? ... என் ஒரு நாள் அனுபவத்தை இந்தக் கடிதத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு பெண்ணின் அங்கங்கள் என்னென்ன அளவில் இருக்க வேண்டுமென்பதை நீ அறிவாய். என் மார்பகங்கள். என் இடை மற்றும் உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் அறிந்தே வைத்திருப்பாய். தினம் தினம் நீ தெரிந்துகொள்ள விருப்பத்துடன் இருக்கிறாய். என் நண்பனாய், கணவனாய், தகப்பனாய், காதலனாய் இன்னும் எல்லாமுமாய் வாழ்வின் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்ட உனக்கு பெயர் போட்டு கடிதம் எழுதும் அளவுக்கான சுதந்திரத்தை இன்னும் சமூகம் வழங்கவில்லை.

வீட்டில் யாருக்கும் நான் படிப்பதில் விருப்பமில்லை. திருமணம் முடித்துவிட்டால் ஒரு சுமை முடிந்ததென்று நினைத்திருந்தார்கள். நானோ, அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருந்தேன். அரசு வேலை அல்லது வங்கிப் பணி என்பதே எனது தேர்வாக இருந்தது. தேர்வு நாள் நெருங்க நெருங்க எனக்கு பதட்டம் அதிகரித்தது. படிப்போமா? தேர்ச்சியடைவோமா? என்பதல்ல பிரச்சனை. சென்ற மாதத்தில் 'மாதவிடாய் முடிந்த தேதியிலிருந்து எண்ணிக் கொண்டிருக்கிறேன். சரியாக 29 ஆம் நாள் தேர்வு'. அடுத்த மாதவிடாய் ஆரம்பிக்கலாம். தயாராக 'விஸ்பர்' வாங்கிக் கொண்டேன். அகலமானதும், நாள் முழுவதும் சுதந்திர உணர்வும் கொடுக்கும் என விளம்பரத்தில் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். ஜன்னலோரத்தை லயிக்கும் பேருந்துக் கவிதைகளை நினைக்கவும் முடியாத நரகம் அது.

நெரிசலில் பிதுங்கி நின்றேன். கழுத்துக்கு அருகில் யாரோ மூச்சு விடுவதுபோல இருந்தது. கூட்ட நெரிசலில் இதையெல்லாம் எப்படித் தவிர்ப்பது. திரும்ப விரும்பினேன். அது நீயாக இருக்கக் கூடாது.

ஆம் நீயில்லை. ஒரு அக்கா அருகில் நின்றிருந்தார். வெகு தொலைவில் நின்றபடி. என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாய் நீ. அடிவயிற்றில் மெதுவாக மாற்றங்கள் தெரியத் தொடங்கின. விஸ்பர், கைப்பைக்குள் இருக்கிறது. 'தேர்வு மையத்துக்குச் சென்றதும் பாத்ரூமுக்குத்தான் முதலில் செல்ல வேண்டும்.' மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

"வேகமா எறங்குமா" அதட்டல் குரல். அது நீதான். கொஞ்சம் மெதுவாய்ச் சொல்லியிருக்கலாம். விசும்பலாய் இருந்தது, ஆனாலும், இதுவெல்லாம் பழகிவிட்டது.

நடைபாதைக்கான இடத்தில் நீ பேசியபடி நின்றிருந்தாய். அந்த சிகரெட்டை புகைப்பதில் உனக்குத்தான் எத்தனை ஆனந்தம். அதில் என்னதான் இருக்கிறது?. அசையாமலும், வேகமாகவும் பாத்ரூமைத் தேடி நடக்க ஆரம்பித்தேன். அவ்வளவு பெரிய கல்லூரி அது. எல்லோரும் அவரவர் எண்களுக்கான தேர்வு அறையை பார்ப்பதில் ஆர்வமாக இருந்தார்கள். ஒருவழியாக பாத்ரூமை அடைந்துவிட்டேன். குமட்டலாக இருந்தது. பொதுக் கழிப்பிடங்கள் எப்படி இருக்குமென்பது உனக்கும் தெரியும்தானே?. ஒரு நாள்தான் தேர்வு. இதற்காக புதிய கழிப்பிடமா கட்டுவார்கள்?. அங்கு கொஞ்சமும் தண்ணீர் இல்லை. இதற்காகத்தான் கைப்பையில் தண்ணீர் பாட்டில் எப்போதும் வைத்துக் கொள்கிறேன்.

தேர்வு அறைக்குள் மிகத் தாமதமாகவே நுழைந்தேன். விஸ்பர் மாற்றியிருப்பினும், உதிரப் போக்கு உறுத்திக் கொண்டுதான் இருந்தது. அரிப்பும், அசூசையும் கொண்ட உணர்வு அது. 'சே, இந்த உடலோடுதான் வாழ வேண்டுமா?'. நான் என்னையே சில சமயங்களில் வெறுக்கிறேன்.



4 மணி இருக்கும், தேர்வு முடிந்துவிட்டது. திரும்பிச் செல்வதற்கும் அதே பேருந்துதானா? என நினைக்கும் போது நீ உன் புதிய இருசக்கர வண்டியை முறுக்கிக் கொண்டிருந்தாய். கேட்டால் மாட்டேனென்றா சொல்லப் போகிறாய். ஆனாலும், யாரென்றறியாத ஒருவனிடம் என் வேண்டலுக்கும், யாரெனத் தெரியாத பெண்ணுக்கு செய்யும் உன் உதவிக்கும் சமூகம் வைத்திருக்கும் பெயர் வேறு.

பேருந்து நிலையத்திலேயே கூட்டம் அதிகமாக இருந்தது. லாவகமாக ஜன்னலில் கைவைத்து, படிக்கட்டில் கால் மிதித்தபடி ஒவ்வொரு பேருந்தின் பின் வாசலிலும் நீ தொங்கியபடி பயணம் செய்தாய். என்னால் அது முடியாதே. அதுவும் இந்தச் சூழலில். ஆட்டோவில் போவது உத்தமம். நீதான் ஆட்டோவில் அமர்ந்துகொண்டிருந்தாய். தனிப் பெண்ணாக ஒரு ஆட்டோவில் உன்னோடு எப்படி வருவது? ... தினமும் நாளிதழ்களில் படிக்கும் செய்திகள் நினைவுக்கு வந்து அச்சமூட்டின. வீட்டிற்கு தாமதமாகச் செல்வதும், சரியான முடிவில்லை. நல்ல வேளை. என்னிடம் அலைபேசி இருக்கிறது. அவசரத்துக்கு யாரையாச்சும் அழைக்க வாய்ப்பிருக்கிறது. தனியே ஆட்டோவில் அமர்ந்தேன். பேச்சுத் துணைக்கு 'வாட்ஸ் ஆப்'பில் நீ ஆன்லைனில் இருந்தாய். என்னென்னவோ பேசினாய். பயணத்தின் தனிமையை விளக்கியபடி பேசிக் கொண்டிருந்தேன்.

வீட்டுக்கு வந்தபோது. உதிரப்போக்கு அதிகமாகத் தொடங்கியது. எனக்கென ஒரு அறை இல்லாத வீடு அது. உடைமாற்றி குளித்துட்டு, நைட்டி அணிந்துகொண்டேன். ஓரளவு ஓய்வாய் இருந்தது. வீட்டில் தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தது. அது என்ன நிகழ்ச்சியென்று நினைவில்லை. பேசியது நீதான், "அத்தினி, சித்தினி, பத்தினி" என பெண்கள் குறித்து விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தாய். நகைச்சுவை நிகழ்ச்சியொன்றில் நீயே தோன்றி பெண்ணுடையில் சாகசங்கள் செய்துகாட்டினாய். இப்படி ஒரு நாள் நீ உடை உடுத்தும்போது. "விஸ்பரைக்" கொடுக்க வேண்டும். அதனை எப்படி அணிவதென்று நீ விழிப்பாய் என நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

இரவும் உதிரப்போக்கு நின்றபாடில்லை. அலைபேசியில் உன் குறுஞ்செய்தி வந்தது. சில நிமிடங்கள் பேசலாம் என பதிலனுப்பினேன். யாராவது பேசிக் கொண்டிருந்தால், உறுத்தலையேனும் மறக்கலாம் அல்லவா. மணி ஒன்றரை தாண்டிவிட்டது. நம் உரையாடலும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. நீ நீயாக இருந்தபடியும், நான் நானாக இருந்தபடியும் பேசினோம். கடைசியாக உன் கேள்வி நினைவிருக்கிறது "நள்ளிரவு தாண்டிப் பேசுகிறாயே? நீ என்னைக் காதலிக்கிறாயா?".

எதுவும் சொல்லாமல் உறங்கிப் போனேன். ஒருவேளை நாம் காதலிக்கவும் செய்யலாம். இந்தக் கடிதத்தில் பகிரப்பட்ட என் ஒரு நாளை உன்னால் புரிந்துகொள்ள முடியுமென்றால்...

இப்படிக்கு

............

நன்றி - சிந்தன்ரா

w.w.w.mattru.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரும்பிப்பார்!

(ஓதாமல் ஒருநாளும்...)

உடைக்காமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்!
உடைத்ததெலாம் ஏற்றாமல் திரும்பவேண்டாம்!
இடைக்கால ஓய்வேதும் எடுக்கவேண்டாம்!
இரவுபகல் என்றெல்லாம் பார்க்கவேண்டாம்!
அடைக்காமல வெளியினிலே போடவேண்டாம்!
ஆர்வந்து கேட்டாலும் காட்டவேண்டாம்!
படைத்தெங்கே வாழ்ந்தாலும் இழந்தோர்பக்கம்
பார்த்தொருகால் மனதுக்குள் வாழ்த்தாய் நெஞ்சே!

நிலைமையெலாம் மாறுமென நினைக்கவேண்டாம்!
நினைத்துள்ள நிம்மதியைக் குலைக்க வேண்டாம்!
குலைத்தேதும் அச்சங்கள் கொள்ளவேண்டாம்!
கொண்டாலும் வணக்கத்தைக் குறைக்கவேண்டாம்!
விலையானால் காசல்லால் விற்கவேண்டாம்!
வீரத்தைச் சொல்லாமல் விடவும் வேண்டாம்!
மலைபோன்றே வாழ்ந்தாலும் மறைந்தோர்தங்கள்
மண்பார்த்தே மனதுக்குள் வாழ்த்தாய் நெஞ்சே!

– தாமரைத்தீவான்– [ஈச்சந்தீவு, கிண்ணியா]

## என்னிடம் சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்

என்னிடம்
சித்திரப் பின்னல்கள் இட்டு நெய்யப்பட்டும்
தங்கமும் வெள்ளியும் ஒளிகால
நீலமும் மந்தமும் இருண்டதுமான
இரவையும் பகலையும் பாதி ஒளியையும் இட்டு
உருவாக்கப்பட்ட சொர்க்கத்தின் துகில்கள் இருக்குமாயின்
அவற்றை நின்காலடியின் கீழ் பரப்புவேன்
ஆனால் நான்,
ஏழையாய் இருப்பதால்
என்னிடம் இருப்பதெல்லாம் கனவுகளே



எனது கனவுகளை நின்காலடியின் கீழ்
பரப்பியுள்ளேன்
மெதுவாக மிதியுங்கள்
ஏனெனில்
என் கனவுகள் மீது மிதிக்கிறீர்கள்.

நூல் : மறுபாதி
–டபிள்யூ பி.யேற்ஸ்–
தமிழில் : மு.பொன்னம்பலம்

## நகரும் என் நாட்கள் ....

என் அறையெங்கும்
விரவிக் கிடக்கிறது
விரகம் - அவ் இரவில்

மதர்ப்புக்களின்
நிமிர்வில்
மனம் பதகளிக்க
கண்களை
நிமிர்த்த முடியாது
பனித்துக் கிடக்கிறேன்
நாள்..

இடையின்
வளைவுகளை - வனைந்த
குயவனின் கைகள்
முறிந்துவிட்டன - பின்னோர்
பெண்ணின் இடையும்
அப்படி வளையவில்லை

நீ - என்
நினைவில் ஆடம்
நர்த்தனங்களின்
அதிர்வில் - அவ்விரவும்
சிதிலஞ் சிதிலமாய்
உதிர்ந்து விழுகின்றது

தூக்கத்தின் அரசன் - அன்றும்
தோல்வியுற்று . . . உன்
அதரங்கள் பிழந்து உதிர்ந்த
- வார்த்தைகள்

இன்று போய் - போருக்கு
நாளை வரச் சொல்கின்றன

சிவந்த விழிகளுடன்
நிமிர்ந்து பார்க்க
விடிந்து
விட்டது - இன்றும் . .

இனி என் செய்வது?

இரவுக்காய் ஏங்கும்
எண்ணங்களுடன்
இன்றைய நாளும் . . .

இரவுகள் பகல்களாக

. . . பகல்களோ
இரவுகளாக . . .

– மாயன் –



## தலையிடிக்கு கை மருந்து

வெற்றிலைச் சாற்றில்
வேர்க் கொம்பை உரைத்து
நெற்றியில் தடவினால்
நிற்கும் தலையிடி!

வேலிப் பருத்தி சாற்றில்
வேற் கொம்பை உரைத்து
தலையிடிவர நெற்றியில்
தடவினால் நிற்கும்!

கற்பூரத் தூளுடன்
வெற்றிலை சாற்றில்
கலந்து சூடாக்கி
நெற்றியில் போட
நிற்கும் தலையிடி!



ஒருத்தலைப் பாக்கை
உரைத்துப் பூசினால்
ஒரு பக்கத் தலையிடி
வருத்தங் குறையும்!

## சுதந்திர நாட்டின் பிரஜைகள்

நேற்றும் தலையுயர்த்தி
நடந்த தெருக்கள் தான்
இப்போது நெஞ்சிடிக்க
எவனெவனோ
கைகொண்டு கழுத்தை
நெரிக்கும் கனவுகள்
நேற்றல்ல, இன்றல்ல
நாளைக்கென் வீட்டில்
அதிரும் என்றுய்த்தபறை
செவிக்குள் அதிர்கிறது

மலங்க விழித்தபடி
இருண்ட கண்களினால்
எதுவோ தேடும்
நாங்களும், எங்கள் பொழுதும்.

இளவாலை விஜயேந்திரன்
நூல் – மரணத்துள் வாழ்வோம்

## தீர்வு காணாச் செயல்கள்!

நல்லிணக்க ஆணைக் குழவின்
பரிந்துரைகள் நல்லது - அதன்
சொல்வடிவம் முழுவதும்
செயல் வடிவம் பெறாமையே
தீர்வுத் திட்டம்
செக்கிழுக்கும் சூழ்நிலையில்!
பதின் மூன்றாவது விதிக்கதையும்
பாய்ச்சல் எதுவுமின்றி இங்கு
பதுங்கியுள்ள சூழல்தான்!

சர்வகட்சி கூடியது அடிக்கடி
தூசிதட்டிப் பேசினாலும்
பார்வையாளர்கள் பங்காளர் எவருமே
தீர்வெதுவும் காணவில்லை - தீர்வு
திசை மாறிய பறவைநிலை!

– சேனையூரான் –

# கொட்டியாபுரத்து சிங்கம்

**சம்பூர் சதீஸின்**

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

மழையின் நிமித்தம் மருந்துப் பொருட்கள் கரையத் தொடங்கியதால். இவற்றைப் பாதுகாக்கவே பறங்கியருக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கண்டிப் படைகள் வலிந்த தாக்குதலைத் தொடங்கின.

இனி .. ..

இளஞ்சிங்கன் இன்றும் சிங்கம் நரிக்கூட்டத்தை வேட்டையாடுவதைப் போல தனது அரபு ஜாதி வெள்ளைக் குதிரையின் மீதேறி பறங்கியருக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தான். பறங்கியர் பக்கமிருந்து போரிட்ட பெரும்பாலான சுதேசிகள் கண்டியப் படைகளுடன் இணைந்து கொண்டு பறங்கியரைத் தாக்கத் தொடங்கினர்.

மறுபுறத்தே போரிட்டுக் கொண்டிருந்த இராஜசிங்கனும் டீ சாவும் ஒருவரையொருவர் சளைக்காமல் போரிட்டனர். இருவரும் தத்தமது புரவி மீதமர்ந்து வாட்போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது டீ சாவின் குதிரையானது சகதிக்குள் விட்ட காலை மீண்டும் எடுக்கமுடியாது சரிந்த வேளை எங்கிருந்தோ புறப்பட்ட சுடுகலன் குண்டு ஒன்று டீ சாவின் உயிரை காவு கொண்டது. போர்த்துக்கீசனின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் கொன்ஸ்ரான்ஸ்டைன் டீசாவின் பிரேதம் கண்டி இராச்சிய மண்ணில் வீழ்ந்தது.

டீ சாவுக்கு அன்று துரதிஸ்டம் என்றே கூறவேண்டும். இயற்கையும் தனது ஆதரவை வழங்கவில்லை. அவனது பறங்கிப்படைகளும் அன்று முழுமனதுடன் போரிடவில்லை. சுதேசிப் படைகளும் திடீரென தமது ஆதரவை கண்டி மன்னனுக்குத் தெரிவித்து அவர்கள் பக்கம் சாய்ந்தனர். அத்துடன் டீ சாவின் நிதானமின்மை போன்ற காரணிகளால் அன்றைய போரில் பறங்கிப் படைகள் தோல்வி கண்டன.

டீ சா கொல்லப்பட்ட செய்தி தீயைப் போல போர்க்களமெங்கும் பரவியது. கண்டியப் படைகளின் உற்சாகம் அளவு கடந்தது. அவர்கள் மகிழ்ச்சி மேலீட்டினால் ஆரவாரம் செய்து கொண்டு பறங்கிப் படைகளை மூர்க்கமாகத் தாக்கினர். தமது தளபதி கொல்லப்பட்ட செய்தியைக் கேட்ட பறங்கியர் போர் புரிந்தவாறு பின்வாங்கினர்.

பறங்கிப் படைகள் கொழும்பை நோக்கி பின் வாங்குவதை உணர்ந்த செனரத் மன்னன். குமாரசிங்கன் தலைமையிலான படையணியை செங்கடகலவில் பாதுகாப்புக்கு அனுப்பிவிட்டார். பக்கம் மாறிய சுதேசிய வீரர்களையும் கண்டிக்கு குமாரசிங்கனுடன் போகப் பணித்தார். மிகுதிப் படைகளுடன் தானும் இராசசிங்கன் தலைமையிலான படையினரும் பறங்கியரைத் தொடர்ந்து தாக்கி கொழும்பையும் கைப்பற்றுவது என்ற எண்ணத்துடன் கொழும்பு நோக்கி முன்னேறினார்.

கொழும்புக்கு படையெடுத்து வந்திருந்த கண்டிய வீரர்கள் ஏழு கோறளை, நான்கு கோறளை, காலி போன்ற இடங்களைக் கைப்பற்றி அங்கிருந்த போர்த்துக்கீசருடைய பாது காப்பு அரண்களையும் கோட்டைகளையும் சேதப்படுத்தினர். மல்வானை, களுத்துறை கோட்டைகளையும் கைப்பற்றித் தரைமட்டமாக்கினர். பறங்கியரின் வழி பாட்டிடங்கள் பலவற்றை அடித்து நொறுக்கினர். பறங்கிப் படைகள் எல்லாம் கொழும்பக்குப் பின்வாங்கிச் சென்றனர். கொழும்பு நகரின் பிரதான வாயில் மூடப்பட்டு கண்டிய வீரர்கள் புகுந்து விடாதபடி பாதுகாக்கப்பட்டது. இவ்வாறு கண்டியப் படைகள் வீரத்துடன் முன்னேறி கொழும்பைத் தாக்கிக் கொண்டிருக்கும் போது இராசசிங்கன் சுகவீனம் அடைந்ததனால் அவனை உடனடியாக இளஞ்சிங்கனின் பாதுகாப்பில் நூறு வீரர்களுடன் கண்டிக்கு அனுப்பினான் செனரத் மன்னன். இவர்கள் கண்டி செல்லும் வழியில் மெனிக்கடவரவில் நோயுற்றிருந்த 70 போர்த்துக்கீச வீரர்களையும், கோட்டைக்காவலரையும் கைது செய்து கொண்டு கண்டிச் சிறையில் அடைந்தனர். செங்கடகலவில் இராஜசிங்கனுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. அவன் தேறிவரும் வரை நண்பன் இளஞ்சிங்கன் அருகிலிருந்து தேவையானவற்றைக் கவனித்து வந்தான்.

இவ்வாறு நண்பனுக்கு குணமாகியதும் இளஞ்சிங்கன் ஒரு மாத காலத்துக்கு மேலாக தங்கியிருந்ததால் கொட்டியாபுரம் திரும்ப எண்ணங் கொண்டான். இராஜசிங்கனும் நண்பனைப் பிரிய மனமில்லாமல் விடைகொடுத்தான். மன்னன் செனரத் பல வகையான அன்பளிப்புப் பொருட்களுடன் அவற்றைக் கொண்டு சேர்க்க பத்து வீரர்களையும் குதிரையிலனுப்பினான். இளஞ்சிங்கனும் பறங்கியர் பற்றிய பயமின்றி வழி நெடுகிலும் கண்டி மக்கள் தமது வாழ்த்துக்களைக் தெரிவிக்க அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு நண்பன் சத்யனுடன் கொட்டியாபுரத்தை வந்தடைந்து வன்னியனாரைச் சந்தித்து நடந்த போர் விபரங்களையெல்லாம் கூறி செனரத் மன்னன் கொடுத்தனுப்பிய அன்பளிப்புப் பொருட்களையும் கொடுத்தான். வன்னிமையும் தன் மருமகனை உச்சி மோந்து மனங்குளிர நீடுழி வாழ வாழ்த்தினார். கொட்டியாபுரத்து வீரத்தை உலகிற்குப் பறை சாற்றிய இளஞ்சிங்கனுக்கு அன்று வன்னியனார் அரண்மனையில் விருந்தும் பாராட்டு நிகழ்வும் தடபுடலாக நிகழ்ந்தேறியது. இளஞ்சிங்கன் வரலாற்றில் ஓர் நாயகனாக மிளிர்ந்தான்.

### இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமை

இளஞ்சிங்கன் வன்னிமையாக பொறுப்பேற்கும் நிகழ்வு நடைபெறும் தேதி தண்டோரா போடப்பட்டது. கொட்டியாபுரப்பற்று எங்கும் வடக்கே கெவுளி முனை தொடங்கி தெற்கே வெருகலம்பதி வரையிலான மக்கள் இளஞ்சிங்கம் வன்னிமையாகும் நிகழ்வைக் காண்பதற்காக மாட்டு வண்டில் களிலும் கால்நடையாகவும் சாரை சாரையாக தலைநகர் மேன்காமத்தை நோக்கி அணிவகுத்தனர். கொட்டியாபுரப்பற்றின் தலைநகரான மேன்காமம் அன்று புதுப் பொலிவுடன் அலங்காரப் படுத்தப்பட்டது. மாவலியாள் மகிழ்தே சீதலமூட்டும் மேன்மை தங்கிய பதியாம் மேன்காமம் அன்று ..... .... ..

... பாகம் 18 தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுஷ்கா, திரிஷா வெளியேற்றம்

அஜீத் 55 படத்தின் இரண்டாம் பாகத்தை கவுதம் மேனன் உடனே இயக்கபோவதாகவும், அந்த படத்தில் நடிக்க அனு'கா மற்றும் த்ரி'ா ஆகியோர் மறுத்துவிட்டதாகவும் செய்திகள் வெளிவந்து சமூக வலைத்தளத்தையும் பெறும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இருந்த போதிலும் அது குறித்து எந்தவித முடிவுகளும் தற்போது வரை எடுக்கப்படவில்லை என கவுதம் மேனன் தெரிவித்துள்ளார்.

## மிரட்டும் "ஐ"



ஐ படத்தின் மோ'ன் போஸ்டரை வெளியிட்டு ரசிகர்களை ஒரு மிரட்டு மிரட்டியிருக்கிறார் டைரக்டர் 'ங்கர். அந்த போஸ்டரில் விக்ரமின் இயல்பான முகம் கோரமாவது போல் உருவாக்கப்பட்டிருப்பதால், படத்துக்கான எதிர்பார்ப்புகள் இன்னும் அதிகரித்துள்ளது.

## தல யை சொறண்டிப் பாக்காதீங்க!!



தமிழ்நாட்டின் முன்னணி வாரஇதழ் ஒன்று அஜித்தை புகழ்ந்து வெளியிட்டனர். இதில் அஜித்தை எம்.ஜி.ஆர் போல் சித்தரிப்பது போல் அதில் குறிப்பிட்டு இருந்தது. ஆனால் அந்த கட்டுரையை முழுவதுமாக படித்த போது அவர் ஏன் பொதுவிழாக்களிலும், பேட்டிகளிலும் ஈடுபடுவது இல்லை என விளக்கம் அளித்துள்ளனர். அதில் அஜித் ரசிகர்களுடன் தொடர்பில் இருந்தால் தன் முகம் அழுத்து போய் விடும், இதை தான் எம்.ஜி.ஆர் கடைபிடித்தார் என்று புகழ்வது போல் அஜித்தை சீண்டி பார்த்துள்ளனர்.

## அட்லி – பிரியா பாப்பா வாழ்த்தும் சிவா



சிவகார்த்திகேயனை பார்க்க அடிக்கடி ஜோடி நம்பர் 1 நிகழ்ச்சிக்கு செல்வேன், அங்கு தான் முதன் முதலாக ப்ரியாவை சந்தித்தேன். 'முகப்புத்தகம்'னு குறும்பட ஷார்ட் பிலிமோட பிரீமியர் ஷோவுக்கு பிரியா அவங்க குடும்பத்தோட வந்திருந்தாங்க. என் குடும்பத்துல உள்ளவங்களும் வந்ததால, ரெண்டு பேரும் ஃபேமிலி ஃப்ரெண்ட்ஸ் ஆகிட்டோம். சொல்லபோனால் எங்கள் காதலுக்கு பிள்ளையார் சுழியே சிவகார்த்திகேயன் தான் என்கிறார் அட்லி.

## பப்ளிமாஸ் - வோர் - மேக நடிகை



தமிழ் மற்றும் தெலுங்கில் நம்பர் ஒன் நடிகையாக இருக்கும் சின்னக்குஷ்பு, சமீபத்தில் வெளியான மேகமான பெயரைக்கொண்ட திரைப்படத்தின் நாயகியாக நடித்த உலக நாயகனின் மகள் பெயரை கொண்ட அறிமுக நடிகைக்கு பயப்படும் அளவுக்கு என்ன நடந்தது என்பதுதான் கோலிவுட்டின் இப்போதைய ஹாட் டாக். சின்னக்குஷ்பு ஒப்பந்தமாகும் படங்களின் இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர்களை வீட்டிற்கு வரவழைத்து ஸ்பெஷல் விருந்து கொடுக்கின்றாராம் மேக நடிகை. இதுதான் சின்னக்குஷ்புவின் பயத்துக்கு காரணம் என கூறப்படுகிறது.

## அண்ணி ஆவாரா அசின்



பாலிவுட் மீது கொண்ட ஆசையால் தமிழ் படங்களுக்கு முழுக்கு போட்டு சென்றவர் அசின். அங்கு இவர் நடித்த படங்கள் ஹிட் ஆனாலும், ரசிகர்கள் ஏற்று கொள்ளவில்லை. இதனால் மிகவும் மன வருத்தத்துடன் கோலிவுட் இயக்குனர் ஒருவருக்கு போன் செய்து வாய்ப்பு கேட்க, அவர் அண்ணி வேடம் உள்ளது என கூற அதிர்ச்சியில் போனை வைத்துவிட்டாராம்.

## ஏன் இந்த சதி தளபதிக்கு



சில நாட்களுக்கு முன்னர் கத்தி படத்திற்காக விஜய், அனிருத் இசையமைப்பில் பாடல் ஒன்றை பாடினார். விஜய் பாடுவதற்கு முன்னர் அனிருத் முழுப்பாடலையும் விஜய்க்கு பாடி காட்டினார். இரண்டு பேருமே பாடிய பாடல்களும் ஒலிப்பதிவு செயப்பட்டுள்ளது. ஆனால் விஜய் பாடிய பாடல்தான் படத்தில் வரும் என்று அனிருத் கூறியுள்ளார். இந்நிலையில் அனிருத் பாடிய பாடல் இண்டர்நெட்டில் லீக் ஆகிவிட்டது. இதையொட்டி அனிருத் ரிகார்டிங் செய்யும் இடத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் கத்தி படத்தினை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டால் ரிலீஸுக்கு முன்னரே படத்தை எப்படியாவது கைப்பற்றி இண்டர்நெட்டில் போட்டுவிடுவோம் என படக்குழுவினர்களுக்கு மிரட்டல் வந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## செல்லம் நீ யாரும்மா?!!!



சென்ற வாரம் – த்ரிஷா

## மூக்கு அறுவை!?



தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் பிசியாக இருக்கும் சமந்தா, அடுத்து பாலிவுட் படங்களில் நடிக்க முயற்சி செய்து கொண்டு வருகிறார். இந்நிலையில் அவருடைய வட்டாரங்கள் சமந்தாவின் மூக்கை இன்னும் அழகுபடுத்த ஆபரே'ன் செய்தால் நன்றாக இருக்கும் என கூறிய ஆலோசனையின்படி சமீபத்தில் லண்டன் சென்று முதல்கட்ட மூக்கு அறுவை சிகிச்சையை சமந்தா செய்துள்ளார்.

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குனர் கவுரவ்வின் சிகரம் தொடு



தந்தை மகன் பாசப்பிணைப்பு, ஏடிஎம் கொள்ளை, இடையிடையே வயிறு குலுங்க வைக்கும் காமெடி, இடைவேளைக்கு பின்னர் வேகமாக நகரும் திரைக்கதை என ஒரு அனைத்து அம்சங்களையும் திகட்டாமல் கொடுத்துள்ளார் இயக்குனர் கவுரவ்.

படித்து முடித்துவிட்டு பேங்க் மேனேஜராக ஆசைப்படுகிறார் விக்ரம் பிரபு. ஆனால் முன்னாள் போலீஸ் அதிகாரியான சத்யராஜ் தனது மகன் விக்ரம் பிரபுவை ஒரு விருது வாங்கும் போலீஸ் அதிகாரியாக மாற்ற வேண்டும் என்று விரும்புகிறார். விக்ரம் பிரபுவின் காதலி மோனல் கஜ்ஜார், தனக்கு கணவராக வருபவர் எந்த காரணத்தை முன்னிட்டும் போலீஸ் அதிகாரியாக இருக்கக்கூடாது என்ற கொள்கை உடையவராக இருக்கின்றார். இந்நிலையில் விக்ரம் பிரபு தந்தையின் ஆசையை நிறைவேற்றினாரா? அல்லது காதலியின் ஆசைக்கு முக்கியத்துவம் கொடுத்தரா? என்பதுதான் கதை.

இதனிடையே ஹைடெக் ஐடியாவுடன் ஏ.டி.எம்மில் கொள்ளையடிக்கும் கும்பலை பிடிக்க விக்ரம் பிரபு செய்யும் சாகசம் என கதையும் திரைக்கதையும் அசராமல் பயணிக்கிறது.

போலீஸ் அதிகாரிக்குரிய கம்பீரம், காதல் காட்சிகளில் குறும்பு, நகைச்சுவை காட்சிகளில் கலகலப்பு என ஒரு பல்சுவை நாயகனாகவே மாறிவிட்டார் விக்ரம் பிரபு. இதேபோல கவனமாக கதையை தேர்வு செய்தால் கண்டிப்பாக கோலிவுட்டின் முன்னணி நாயகனாக உருவாகிவிடுவார் விக்ரம் பிரபு. மோனல் கஜ்ஜார் தமிழ் சினிமாவுக்கு கிடைத்த இன்னொரு அழகான நடிகை. பாடல் காட்சிகளில் கவர்ச்சி காட்டும் மோனல் நடிப்பிலும் ஓகே ரகம்.

சதீஷ், சிங்கமுத்து, கோவை சரளா மற்றும் லொள்ளுசபா மனோகர் என நகைச்சுவை பட்டாளம் ஏராளம். அனைவரும் வயிறு வலிக்க சிரிக்க வைக்கின்றனர். இமான் இசையில் ஏற்கனவே அனைத்து பாடல்களும் ஹிட் ஆனது படத்தின் பிளஸ்.



காதல் காட்சிகள், நகைச்சுவை காட்சிகளை கொஞ்சம் குறைத்துவிட்டு ஏ.டி.எம் கொள்ளை சம்பந்தப்பட்ட காட்சிகளை இன்னும் கொஞ்சம் அதிகம் வைத்திருக்கலாம். இருப்பினும் தூங்கா நகரம் போலவே இந்த படத்தையும் ஒரு விறுவிறுப்பான திரைக்கதையுடன் அமைத்துள்ளார் இயக்குனர் கவுரவ்.

வாழ்த்துக்கள்.

## சினிமா குறுஞ் செய்திகள்



ஹன்சிகா 25 அநாதை குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கிறார் அதேபோல சமந்தா குழந்தைகளுக்கு உதவும் தன்னார்வ தொண்டு நிறுவனம் (என்.ஜி.ஓ) ஒன்றை நடத்துகிறார்.

கத்தி, பூஜை படங்கள் தீபாவளிக்கு வரும் என ஏற்கனவே அறிவித்த நிலையில் ஐ படக்குழு தற்போது வரை அதிகாரப்பூர்வமாக ரிலிஸ் தேதி கூறவில்லை. இதனால் ஐ தீபாவளிக்கு வருமா என்றால் கேள்விக்குறி தான்.

வெளிநாடுகளில் தெலுங்கு நடிகர் ராணாவும் திரி'ாவும் ஒன்றாக சுற்றுகின்றனர். இது அவர்களின் ரகசிய காதலை அம்பலப்படுத்தியுள்ளதாக கிசுகிசுக்கப்படுகிறது.

நடிகை நிகிதாவுக்கும் பிரபல கன்னட நடிகர் தர்'னுக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக சந்தேகம் கொண்ட தர்'னின் மனைவி, நிகிதாவை கொலை செய்ய ரவுடிகளை ஏவியதாக கூறப்படுகிறது.

விஜய் சேதுபதி, ஆர்யா நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் படம் பொறம்போக்கு. தற்போது இப்படத்தின் டைடிட்ல் மாறியுள்ளது. பொறம்போக்கு என்ற வார்த்தையுடன் பொதுவுடமையை சேர்த்து "புறம்போக்கு என்கிற பொதுவுடமை" என மாற்றியுள்ளனர்.

கோலிவுட் ஹீரோயின்கள் அனைவருக்கும் ஒரே கனவு அஜித்துடன் நடிக்க வேண்டும் என்பது தான். இந்த லிஸ்டில் சமீபத்தில் இணைந்துள்ளார் ஹன்சிகா.

முதன்முறையாக இணையும் சன்னிலியோன்-வீர்தாஸின் ரொமான்ஸ் மட்டுமின்றி, கவர்ச்சி ஆட்டம் பாட்டமும் வெறித்தனமாக இருக்கும் என்று பாலிவுட் படஉலகமே எதிர்பார்க்கிறதாம்.

பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன், உலகப் புகழ்பெற்ற நடிகர் ஜாக்கிசான் இருவரும் இணைந்து கோல்டு ஸ்ட்ரக் என்ற ஒரு புதிய படத்தில் நடிக்க இருக்கின்றனர்.

எனது உடல் நிலையை வைத்து நாடக மாட நினைத்தவர்களை ஏமாற்றியதற்காக நான் வருந்துகிறேன் என்று நடிகர் கமல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுள் கிளாஸ் புதிய வடிவில்



கூகுள் நிறுவனம் வடிவமைத்த கூகுள் கிளாஸ்கள் தொழில்நுட்ப உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்தியிருந்தமை யாவரும் அறிந்ததே. தற்போது இந்த இலத்திரனியல் சாதனங்களிற்கான புதிய வடிவமைப்பினைக் கொண்ட பிரேம்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. சுமார் 1,250 பவுண்ட்ஸ்கள் பெறுமதியான இந்த பிரேம்களை முதன் முதலில் பிரித்தானியாவில் அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மொபைலுக்கும் கீபோர்ட்



மைக்ரோசொப்ட் நிறுவனம் iOS, Android மற்றும் Windows இயங்குதளங்களில் செயற்படக்கூடிய மொபைல் சாதனங்களுக்கான கீபோர்ட் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. Microsoft Universal Mobile Keyboard இச்சாதனமானது புளுடூத் தொழில்நுட்பத்தில் செயற்படக் கூடியதாக காணப்படுகின்றது.

இலகுவாக பயன்படுத்தக்கூடிய வகையிலும், எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள இக் கீபோர்ட்டின் விலையானது 80 டொலர்கள் ஆகும்.

# மிக மெல்லி டேப்ளட்



உலகின் மிக மெல்லிய டேப்ளட்டை அறிமுகப்படுத்தியுள்ளது டெல் நிறுவனம். டெல் வென்யூ 8 7000 (Dell Venue 8 7000) என்ற பெயரில் அறிமுகமான இந்த டேப்ளட் 6mm மட்டுமே தடிமன் கொண்டுள்ளது. 8.4 இன்ச் எட்ஜ் டு எட்ஜ் ஓஎல்ஈடி டிஸ்ப்ளே 2560 x 1600 ரெசல்யூஷனை (8.4 inch, 8.4 inch, 2560 x 1600 pixel edge-to-edge OLED display) கொண்டுள்ளது.

இன்டெல் இசட் 3500 குவாட் கோர் பிராசஸர் (2.3GHz Quad Core Intel Atom Z3580 Processor) மூலம் இயங்குகிறது. 3டி படங்களை எடுக்கும் திறன் இருப்பதுடன், இன்டெல் நிறுவனத்தின் ரியல் சென்ஸ் ஸ்னாப்ஷாட் டெப்த் கமெராவும் (Intel RealSense Snapshot Depth Camera) உள்ளது.

# மிதி கார்



மின்சாரமோ அல்லது எரிபொருட் செலவோ இன்றி கால்களால் ஓட்டிச் செல்லக்கூடிய சிறிய ரக கார் ஒன்றினை Virtue Cycle Solutions நிறுவனம் வடிவமைத்துள்ளது. Pedalist எனப்படும் இக்காரானது 34 அங்கு அகலம் உடையதாகவும் 68 தொடக்கம் 91 கிலோகிராம் எடை உடையதாகவும் காணப்படுகின்றது.

இதில் மின் விளக்குகள் உட்பட இலத்திரனியல் ஹோர்ன் ஒன்றும் உள்ளது. பொலிகார்பனேட்டினால் ஆன வெளி அமைப்பினைக் கொண்ட இவ்வாகனம் எதிர் வரும் 2015ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் பெறுமதியானது 3,500 தொடக்கம் 3,900 டொலர்கள் இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# WINDOWS 09

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது விண்டோஸ் இயங்குதளத்தின் புதிய பதிப்பான விண்டோஸ் 9 இயங்குதளத்தினை அறிமுகம் செய்யவுள்ளது. இது தொடர்பான நிகழ்வு செப்டெம்பர் 30ம் திகதி நடத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் இவ் இயங்குதளத்தின் பயனர் இடைமுகம் உட்பட, அவற்றில் காணப்படும் சிறப்பம்சங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய சில வீடியோக்கள் வெளியாகியுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## அதி விரைவு மெமரி கார்ட்




முதன் முறையாக 512GB சேமிப்புக் கொள்ளளவுடைய மெமரி கார்ட்டினை SanDisk நிறுவனம் உருவாக்கி அறிமுகம் செய்துள்ளது. 90 MB/s தொடக்கம் 95 MB/s வரையான தரவுப்பரிமாற்ற வேகம் கொண்ட இந்த மெமரி கார்ட்டில் HD வீடியோக்கள், HD புகைப்படங்கள் என்பவற்றினை சேமித்துக்கொள்ள முடியும். மேலும் இதில் அதிர்வை தாங்கும் தொழில்நுட்பம், நீர் உட்புகாத தொழில்நுட்பம் என்பவற்றுடன் X-Ray கதிரிலிருந்தான பாதுகாப்பு தொழில்நுட்பம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## செவ்வாயில் மலை ஏறும் ரோவர்

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் நாசா விண்வெளி மையத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கியூரியோசிட்டி ரோவர் விண்கலமானது மலை ஒன்றின் உச்சியை சென்றடைந்துள்ளது. நாசா விஞ்ஞானிகளால் பெயரிடப்பட்ட புயடந பள்ளத்தாக்கு பகுதியில் அமைந்துள்ள மலைப் பகுதி ஒன்றிலேயே ரோவர் விண்கலம் தற்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை வழமையாக திட்டமிடப்பட்ட பாதையை விட்டு விலகி குறுக்கு வழி ஒன்றில் ரோவர் விண்கலம் பயணித்துவருவதாக நாசா நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அலுமினியத்தினால் வடிவமைக்கப்பட்ட ரோவர் விண்கலத்தின் சில்லுகள் செயற்படுவதற்கு குறித்த பாதையானது கடினமானதாக இருந்தமையினால் மணல் நிறைந்த புதிய பாதை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## வீடியோ அழைப்பு இணைப்பு




இணைய இணைப்பின் ஊடாக அழைப்புக்களை மேற்கொள்ளுதல், சட் செய்தல், புகைப்படக் கோப்புக்களை பரிமாறுதல் போன்ற வசதியை தரும் அப்பிளிக்கேஷன் Viber ஆகும். தற்போது இதை பயன்படுத்தி வீடியோ அழைப்பு க்களை ஏற்படுத்தக்கூடிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதன் முறையாக iOS மற்றும் Android சாதனங்களில் இவ்வசதி தரப்பட்டுள்ளது. சுமார் 400 மில்லியன் வரையான பயனர்களைக் கொண்ட Viber சேவையானது Wifi மற்றும் 3G வலையமைப்புக்களின் ஊடாக இலவச சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறந்த ஒலி நீட்சி

இணையத்தளங்களினூடாக பாடல்கள் மற்றும் வீடியோக்களை பார்த்து மகிழும்போது அவற்றிலிருந்து சிறந்த ஒலியை பெற்றுக்கொள்ள Audio EQ நீட்சி உதவுகின்றது. கூகுள் குரோம் இணைய உலாவியில் செயல்படக்கூடிய இந்நீட்சியனது HTML5 இணைய மொழிக்கு ஒத்திசைவாக்கம் உடையதாக காணப்படுகின்றது.

மேலும் இந்நீட்சி YouTube, Bandcamp.com மற்றும் Google Music தளங்களில் சிறந்த முறையில் செயல்படக்கூடியதாக காணப்படுகின்றது.



# ஒரு கொலையின் கதை

3-8 மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரத் தொடர்ச்சி ..........

இதையடுத்து அவளது தம்பியுடனான தொடர்பாடல்கள் தொகுக்கப்பட்டிருந்தன..... அத்தொகுப்பில் அவளது வாக்குமூலங்களில் இருந்த முரண்கள் வெளிப்பட்டன........

............................ இனி இந்த வாரம்

அவனது வாக்குமூலத்தில் கேதீஸ் இல்லாமல் செய்யப்படுவார் என்பது தனக்குத் தெரியும் என அவனது அக்கா லண்டனில் உள்ள யாரோ ஓரிருவர் கதைத்ததாகவே தெரிவித்திருந்தான. ஆனால் ஹிம்சாவின் வாக்குமூலத்தில் அந்த ஓரிருவர் இலங்கையில் மரண வீட்டின் போது கதைத்தாகவே குறிப்பிட்டிருந்தாள்.

அதனைத் தொடர்ந்து அவளது தம்பியின் தொலைபேசி வாக்கு மூலத்தில் அவ்வாறு கதைத்தவர்கள் யாரென அக்காவிற்குத் தெரியாது என அவன் குறிப்பிட்டிருந்தான்.... இலண்டனில் அவளது வீட்டிற்கு வந்து அவ்வாறு கதைத்தவர்கள் யாரென அவளுக்குத் தெரியாதா? என அதிர்ச்சியுடன் வினவப்பட்ட போது அது அவளுக்குத் தெரியாது என்றே அவளது தம்பி பதிலிறுத்திருந்தான்.

தொடர்ந்த அச் சம்பாசனையில் "அக்கா அவ்வாறு கதைத்தவர்களைத் தனக்குத் தெரியும் என முன்னரே கூறியிருப்பதுடன் அதனைக் காவல்துறைக்கு மட்டுமே தெரிவிப்பேன் எனக் கூறியிருந்ததையும், அவ்வாறில்லாவிடில் தம்பியிடம் கேட்டுவிட்டே கூறுவேன்" எனக் கூறியிருந்ததையும் வினவிய போது உண்மையிலேயே அக்காவிற்கு யாரெனத் தெரியாது எனக் கூறினான்.

ஒரே விடயத்தில் அக்காவினதும், தம்பியினதும் சம்பாசனைகள் முரண்படத் தொடங்கியதை வேற்று நிற மைக்கோடுகள் கோடிட்டுக் காட்டியிருந்தன.

அடுத்து 1750 ஸ்ரேலிங் பவுண்கள் பரிமாற்றப்பட்ட விடயம் தொடர்பாக ஹிம்சா யாருக்கு அத்தொகை போடப்பட்டது என்பதைத் தெரியப்படுத்தவில்லை எனக் கேட்டபோது அத்தகவல்களை வெளியிட வேண்டாம் எனத் தானே தெரிவித்ததாக அவளது தம்பியின் பதில் அமைந்திருந்தது.

அக்காவிடம் இருந்து இந்தத் தகவல்களை மெதுவாகப் பெற்றுக்கொள்ளவே தான் விரும்பியதாகவும் அதற்காகவே தான் இவ்விடயத்தைத் தெரியப்படுத்த வேண்டாம் எனத் தெரிவித்ததாகவும் தெரிவித்திருந்தான்.

கொலை நடந்த பின்னர் லண்டனில் உள்ள ஹிம்சாவை யாரோ தொடர்வதாகவும் அவர்கள் யாரேனத் தெரியாது என அவள் அஞ்சுவதாகவும் அவன் தெரிவித்திருந்தான்.

கொலையாளிகள் தனக்கு யாரெனத் தெரியவந்தால் தான் அவர்களை உடனடியாக உங்களுக்கு அறியத்தருவேன் என்பதுடன் அவனது சம்பாசனை நிவைு பெற்றிருந்தது.

இந்தச் சம்பாசனையின் அவளது முரண்பாடுகள் அங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்த தொகுப்புப் பத்திரத்தில் இருந்த விடயம் இந்த வழக்கின் மிக முக்கியமான மற்றொரு பதிவாக இருந்தது.

அத்தொகுப்பில் ஹிம்சாவால் அனுப்பப்பட்ட தொகையான 1750 பவுண்களும் வைப்பிலிடப்பட்டவர் யார் என்பது குறிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு குறிக்கப்பட்டிருந்தவர் முதலாவது கொலைச் சந்தேகநபரின் தாயார்!!!

வங்கிக் கணக்கானது இத்தொகைக்கென மட்டும் திறக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரோ அல்லது அதற்கு முன்னரோ எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யபடாமிலிருந்த அவ் வங்கிக் கணக்கில் இரண்டு முறை பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது.

இரண்டு முறை வைப்பிலிடப்பட்டதாக வந்திரன் அளித்த வாக்குமூலத்திற்கேற்றபவே இவ் வைப்பு நடைபெற்றிருந்தமை வந்திரனின் கூற்றுக்களின் உண்மையை வெளிப்படுத்தியிருந்தன.

வங்கிக் கணக்காளரின் பெயர் முதலாம் சந்தேகநபரான அலிக வின் தாயின் பெயராகவும் அவரது முகவர் அலிகவின் வீட்டு முகவரியாகவும் இருந்தது..... வைப்பிலிடப்பட்ட அந்தப்பணம் அன்றைய தினமே மீளப் பெற்றுக்கொள்ளவும் பட்டிருந்தது. தனது கொலைக்கான பணத்தையும் தானே வழங்கியதை கேதீஸ் அறிந்திருக்கவில்லை தான்!

இத்தாளுடன் அனைத்துத் தொகுப்பு விடயங்களும் நிறைவு பெற்றிருந்தன......

அனைத்துப் புலனாய்வாளர்களும் தமது ஆசவாசப் பெருக்கை அங்கு வெளிப்படுத்தினர்..... சிலர் சிறிது நேர விடுதலையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு வெண்சுருட்டுக்களின் முகையால் தங்களது நுரையீரல்களை நிரப்பத் தொடங்கினர்.

கொலையொன்றின் கதை முழுவதுமாக அவர்களின் முன் விரிந்து தனது அனைத்து இருட்பக்கங்ளையும் அவர்களுக்கு வெட்ட வெளிச்சமாக வெளிக்காட்டியிருந்தது.

நேரத்தின் சாவின் பின் அவர்கள் அனைவரும் ஒன்றாக இப்போது உதவி அத்தியட்சகரின் முன்னர் விறைப்பாக இருந்தார்கள்.

" ஏதாவது திருத்தங்கள், சந்தேகங்கள், முரண்பாடுகள் உங்களுக்கு உள்ளதா?" கேள்வியின் அதிர்வு அந்த அறையில் அடங்கவில்லை.... பதில் விழுந்தது .... "இல்லை"..... "தெளிவாகத் தெரிகின்றது அவளுக்கும் இதில் சம்பந்தமிருப்பது" (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -19

# நமது உடலை பராமரிப்பது எப்படி??


(வி.என்.சந்திரகாந்தி)

எமது சரீரம் இயற்கையிலிருந்து தோன்றியது. இயற்கையின் சூழலில் இயற்கையை ஒட்டி வாழ்வதற்கு ஏற்ற முறையில்தான் அது அமைந்துள்ளது. இன்று நாம் தலைகால் புரியாமல் இயற்கை தந்த உடல் என்னும் இந்த வரப்பிரசாதத்தை துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கின்றோம்.

பலவகை மதுபானங்கள், நாசகார போதைவஸ்துக்கள், வெண்சுருட்டு வெற்றிலை ஆகியவற்றின் பாவனை நாமே எமக்கு செய்யும் துரோகமான செயல்களாகும். இன்றைய இந்த நிலையிலிருந்து நாம் எமது உடலை எப்படி பராமரிப்பது பாதுகாப்பது என்று பார்ப்போமானால் அது தொடருந்தை புறப்படவிட்டுவிட்டு மாட்டுவண்டியில் துரத்துவது போன்ற செயலுக்கு ஒப்பானதாகிவிடும். இந்த தொடருந்து என்ற உவமை சீரழிந்துவிட்ட உடலையும் மாட்டுவண்டி என்ற உவமை உறுதியற்ற மருத்துவத்தையும் குறிக்கின்றது.

மருத்துவத்தில் இரண்டு பிரிவுகளை காண்கின்றோம். ஒன்று நோயை அடையாளம் காணுதல் (Diagnosis) மற்றையது பரிகாரம் (Treatment) காணுதல். விஞ்ஞானம் எவ்வளவுதான் முன்னேறிவிட்டாலும் நடைமுறையில் இந்த இரண்டு பிரிவுகளும் நூறு வீதம் வெற்றியளிக்கும் வகையில் இல்லை. புற்றுநோய் ஒரு உயிர்கொல்லி நோயாக இருந்தும் அதனை ஆரம்பகட்டத்திலே அடையாளம் காண்பதும் உரிய பரிகாரம் செய்வதும் இன்றும் இயலாத காரியமாகவே உள்ளது.

இன்று 'எபோலா' என்ற உயிர்கொல்லி தொற்றுநோய் ஒன்று சைபீரியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது மனித குலத்திற்கே அச்சுறுத்தலாக உள்ளது. ஆனால் இதற்கான பரிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை என உலக சுகாதார ஸ்தாபனமே அறிவித்துள்ளது. இப்படி எத்தனையோ நோய்கள் அடையாளம் காணப்படாமலும் பரிகாரம் கண்டுபிடிக்கப்படாமலும் உள்ளன. எமது உடல் சுத்தமான காற்றிலும் தெளிந்த நீரிலும் சத்துள்ள உணவிலும் தான் உயிர்ப்பினை பெறுகின்றது. இன்றைய நிலையில் நாம் இவற்றை பணம் செலுத்தி பெற்றுவிடலாம் என நீங்கள் கருதினால் அங்குதான் நீங்கள் தவறு இழைப்பவர்களாகிறீர்கள். உண்மையில் எமது உடல் தூய காற்றையும், நீரையும் உணவு வகைகளையும் கஷ்டப்பட்டுத் தேடி கண்டுபிடித்து பயன்படுத்தகூடிய விதத்தில் அதற்கான பலத்துடன் படைக்கப்பட்டுள்ளது.

எமது முன்னோர் நீர் நிலைகளை தேடி அலைந்தார்கள். உணவுக்காக நாள் முழுவதும் காட்டில் அலைந்து திரிந்து மிருகங்களை துரத்தி வேட்டையாடினர். நிலத்தை அகழ்ந்து கிழங்கு வகைகளை சேகரித்தார்கள். அவர்கள் உண்ட உணவில் ஏதாவது இரசாயனப்பொருட்கள் சேர்ந்திருந்தனவா? விஸ்கி, பிரண்டி, ஜின் போன்ற உடலை எரிக்கும் மதுசாரங்களை அவர்கள் அறிந்திருந்தார்களா? இல்லை!

அதனால் தான் அவர்கள் நோய்கள் எதுவுமின்றி நீண்டகாலம் உயிர் வாழக்கூடியதாக இருந்தது. நோய் எதிர்ப்பு சக்தி அவர்களிடம் நிறையவே இருந்தது. மிருகங்களையும் பறவைகளையும் நீர்வாழ் உயரினங்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றுக்கெல்லாம் இயற்கையை தவிர யார் மருத்துவர்? இன்றைய நாகரீக உலகில் ஆதி மனிதனின் வாழ்க்கை முறையால் அவன் பெற்றுக்கொண்ட சக்திக்கும் ஆரோக்கியத்துக்கும் மாற்றீடு என்ன? சிறுவர் முதல் முதியோர் வரை சரியான உணவுப்பழக்கத்தை கைக்கொள்ள வேண்டும். நன்கு நீரருந்த வேண்டும். கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் அல்லது பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். எட்டு மணி நேரம் தூங்க வேண்டும். தினமும் காலைக் கடன்களை நிறைவேற்ற வேண்டும்.

சிறுவர்களும், இளைஞர்களும், நடுத்தரவயதினரும் நன்கு களைக்கும் படியான விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், ரகர் போன்ற விளையாட்டுக்கள் நன்கு களையை உண்டுபண்ணி உள்ளுறுப்புக்களின் வளர்ச்சிக்கும் சக்திக்கும் துணைபுரியும். நீச்சல், துவிச்சக்கர வண்டி சவாரி, மலையேறுதல் போன்றவையும் ஒத்த பலனை தரும். இளமையில் செய்யும் பயிற்சிகள் எமது முதுமை காலம் வரை கைகொடுக்கும்.

எமது உடலுக்கு சில வகை உணவுகள் ஒவ்வாமையை உண்டுபண்ணும். உடல் எங்கிலும் தடித்து சிவப்பதுடன், நாள் செல்லச்செல்ல இருதயத்தை செயல்படவிடாதபடி இறுக்கும். டாக்டரிடம் போனால் நீங்கள் தான் உடலுக்கு ஒவ்வாமையை உண்டுபண்ணுவது எது என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறி கையை விரித்து விடுவார்!

எனது நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு கோழி இறைச்சி ஒன்றைத்தவிர மற்றைய இறைச்சி வகைகள் அனைத்தும் ஒவ்வாமையை உண்டு பண்ணி உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவை.

23.08.2014ல் சுபமங்களாவில் ஒரு பூப்புனித நீராட்டு விழா நடந்தது. சுயபரிமாறல் முறையில் நண்பர் தனக்கான உணவை கோழி இறைச்சிக்கறி, சிக்கன் டெவல், உட்பட அளவாக பரிமாறி எடுத்துக்கொண்டார். அவரது மனைவி, மகன், மகள், அவர்களது குடும்பம் பேரப்பிள்ளைகள் நால்வர் உட்பட ஒரே மேசையில் சாப்பிட்டனர். நண்பர் சாப்பிட்டு முடித்து ஐஸ்கிறீமும் பருகி ஆறுதலாக மூச்சு விடும் போது மனைவி அவரை கேட்டாள், 'நீங்கள் ஆட்டிறைச்சி சாப்பிடவில்லை தானே?' என்று. அவர் அதிர்ந்து விட்டார்! "ஏன் ஆட்டிறைச்சி இருந்ததா?" என அவசர அவசரமாக கேட்டார். 'ஏன் அங்கே Board வைத்திருக்கின்றார்கள். நீங்கள் பார்க்கவில்லையா?" மனைவி கேட்டாள். அப்ப 'நீர் ஏன் எனக்கு கூறவில்லை' என்று கேட்டார். 'நீங்கள் சாப்பிடமாட்டீர்கள் என்று தான் கூறவில்லை' என்று அவள் ஆறுதலாக பதில் கூறினாள். நண்பருக்கு தலை சுற்றி வியர்க்க தொடங்கிவிட்டது. ஒவ்வாமை எப்படியான தாக்கத்தை கொடுக்கும் என்று அவருக்கு தெரியும்.

மருமகன் நண்பரின் நிலையை புரிந்து கொண்டார். அவர் நண்பருக்கு அடுத்தபடியாக வரிசையில் நின்றவர். 'நீங்கள் பயப்பட ஒன்றுமில்லை. நீங்கள் உங்களுக்கான உணவை பரிமாறி சென்ற பின்னர்தான் ஆட்டிறைச்சி பாத்திரம் மேசைக்கு வந்தது' என்று தெளிவுபடுத்தினார். நண்பருக்கு அப்போதுதான் போன உயிர் திரும்பி வந்தது!

# தேசிய SMS செய்திகள்

- **போக்குவரத்து பிரிவு பொலிசை தாக்கிய இளைஞன் கைது**

கடமையிலிருந்தபோது போக்குவரத்து பிரிவு பொலிசார் ஒருவரை தாக்கிய இளைஞன் ஒருவரை கொழும்பு புறக்கோட்டை பொலிசார் கைது செய்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞரை போக்குவரத்து பிரிவு பொலிசார் மறித்துள்ளார் அத்துடன் இளைஞரை தாக்கியதாகவும், அதனால் கோபமடைந்த இளைஞர் போக்குவரத்து பிரிவு பொலிசாரை தாக்கியதாக கூறியுள்ளார்.

- **பெற்றோல் குண்டு தாக்குதலுக்கு புத்த பிக்குவே முழுக்காரணம் அசாத்சாலி**

தம்புள்ளவில் பள்ளிவாயல் மீதான பெற்றோல் குண்டு தாக்குதலுக்கு புத்த பிக்குவே முழுக்காரணம் என்று பகிரங்கமாக கூறுவேன். ஏற்கனவே காளி அம்மன் கோவிலை அங்கிருந்து அகற்றியதற்கு எதிராக நாம் உரக்க குரல் கொடுத்தமையே இன்று பள்ளிவாயல் குண்டுத்தாக்குதலுக்கு வித்திட்டுள்ளது. தமிழ் முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதனை மறந்ததன் விளைவே இது என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலி தெரிவித்தார்.

- **தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி**

இன்று நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தல்களுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்து ள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. மேலும் வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்லுதல், வாகனங்களை அனுப்புதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

- **மின்னிலையத்தை சீனாவுக்கு வழங்க ரகசிய ஒப்பந்தம்**

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை எக்சிம் வங்கியூடாக சீனாவிற்கு வழங்க இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தினார்.

- **தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடாது**

இலங்கை தமிழரசுக் கட்சியின் இனவாத கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என தேசப்பற்றுடைய தேசிய இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கை தமிரசுக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

- **8 வயது சிறுயை கொன்றவர் கைது**

அக்மீமன ஜனபல கிராமத்தில் 8 வயது சிறுமியை துஸ்பிரயோக படுத்தி பின்னர் கழுத்தை நெரித்து கொன்ற குற்றவாளி இன்று பொலிசாரிடம் சிக்கினார். கழுத்தை நெரித்த பின்னரும் சந்தேகத்தில் கழுத்தில் சுருக்கிட்டு தேயிலை தோட்டத்தில் சிறுமியின் உடலை புதைதுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **நியூயோர்க் பயணமாகும் ஜனாதிபதி**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' இம்மாதம் 21 ஆம் திகதி அல்லது 22 ஆம் திகதி நியூயோர்க்கிற்கு விஜயத்தை மேற்கொள்வார் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

- **புதிய மின்கட்டண முறையினை அமுலாக்க இரு வாரங்களாகும்.**

மாதாந்தம் பெறப்படும் கட்டணப் பட்டியலின் அடிப்படையிலேயே 25 வீத மின்சாரக் கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி.கனேகல தெரிவித்துள்ளார்.

- **இலங்கை கடற்பரப்பினுள் 73 இந்திய மீன்பிடிப்படகுகள் பிடிபட்டன**

சீனாவின் அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்து சென்றுள்ளதாக வெளியான தகவல்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 15ம் திகதி மாலை கொழும்பு துறைமுக சீ.ஐ.சீ.டி இறங்குதுறைக்கு குறித்த நீர்மூழ்கிக் கப்பல் வந்து சென்றுள்ளது.

- **வில்பத்து பகுதியில் காணி சுவீகரிப்பில் கடற்படை**

இராணுவத்தினரைத் தொடர்ந்து தற்போது கடற்படையினரும் காணி சுவீகரிப்பில் இறங்கியுள்ளதாக பீ.பீ.சி. சர்வதேச செய்திச் சேவை தெரிவித்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் கடற்படையினர் சரணாலயத்தினூடாக வீதியொன்றை நிர்மாணித்திருந்தனர். இந்நிலையில் வில்பத்து வனாந்தர பகுதியில் சுமார் 900 ஏக்கர் நிலப்பரப்பை தற்போது கடற்படையினர் சுவீகரித்துள்ளனர்.

- **உண்டியலை உடைக்கவில்லை: சவீந்திர**

ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகின்றது. புதிய தலைவராக மஹிந்த தெரிவுசெய்யப்படுவார். ஆசிய வலையமைப்பில் தொடர்ச்சியாக எட்டாவது முறையாகவும் இடம்பெறும் ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் இன்று ஆரம்பமாகின்றது.

# நிகழ்வுகள்

## "பொன்னாவரை"

சேனையூர் இரத்தினாவின் "பொன்னாவரை" கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 14.09.2014 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பிற்பகல் 2.30 மணியளவில் சேனையூர் மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் அனாமிகா நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது. அந்நிகழ்வில் முன்னாள் மத்திய கல்லூரியின் அதிபரும், முன்னாள் திருமலை பாராளுமன்ற உறுப்பினருமான திரு.க.துரை ரெத்தினசிங்கம் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். அத்துடன் பிரதம அச்சகர் பிரம்மஸ்ரீ ஸ்ரீராம் கஜிராஜசர்மா அவர்கள், கலாபூஷணம் கா.வீரசிங்கம் அவர்கள், கவிஞர்வி.நவரெத்தினராஜா அவர்கள் மற்றும் மலைமுரசு பிரதம ஆசிரியரும், திருமலை முத்தமிழ் சங்கச் செயற்பாட்டளருமான "மாயன்" இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோருடன் முத்தமிழ் வேந்தரான திரு.முகுந்தன் அவர்களும் சிறப்பு அதீத களாக கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வு செல்வி.இ. தட்சாயினியின் நன்றயுரையுடன் இனிதே நிறைவு பெற்றது.



- அச்சுதன் -

## தீப்பாறை நிகழ்வு

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சங்கத்தின் நடைமுறைப்படுத்தலின் கீழ் இடம்பெறும் தீப்பாசறை நிகழ்வு வாசிப்பறை நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 22ம் திகதி (திங்கட்கிழமை) செப்டம்பர் மாதம் 2014 பி.ப 6.30 மணியளவில் மூதூர் பாரதிபுரத்திலுள்ள பாரதி வித்தியாலயத்தில் அதிபர் வீ.மதிபாலசிங்கம் தலைமையில்

செய்தி : பாஸ்கரன் குருக்கள்

## தேவதைகளின் அந்திப்பொழுது

ஸ்ரீ சண்முக இந்து மகளீர் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வு 'தேவதைகளின் அந்திப்பொழுது' கடந்த வியாழக்கிழமை (18.09.2014) மாலை 4.45 மணியளவில் ஆரம்பமாகி இனிதே நடைபெற்றது. இந்நிகழ்வில் திருமதி.எஸ்.ஜலதீபன் (பிரதேச செயலாளர்) அவர்களும், திரு.என்.விஜேந்திரன் (வலயக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும் பிரதம விருந்தினர்களாகவும் இன்னும் பலர் சிறப்பு அதீதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வைக் கண்டுகளிக்க இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பல்வேறு வகையான சிறுவர் கலை நிகழ்ச்சிகளும், நடனங்களும், பாடல்களும் பார்க்க வந்தோர் மனதை களிப்புறச் செய்யும் வண்ணம் சிறார்களால் மேடையேற்றப்பட்டன.





- பிரதீஷ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொலஸ்ட்ரோலா? நோ பயம்

உடல் ஆரோக்கியத்தை கெடுக்கும் விடயங்களில் ஒன்று தான் கொலஸ்ட்ரால். கொலஸ்ட்ரால் அதிகமானாலே இதயத்தில் நோய்கள் வந்து குடியேறிவிடும். கொலஸ்ட்ரால் அதிகரித்த பின்னர், நோய் வந்து கவலைப்படாமல் ஆரோக்கியமான உணவுகளை உட்கொண்டு நோய் இல்லாமல் வாழலாம்.

**ரெட் ஒயின்**

ரெட் ஒயின் இதயத்தை ஆரோக்கியமாக வைக்கும். ஏனெனில் அதில் உள்ள நார்ச்சத்தான டெம்ப்ரானில்லா (tempranillo) என்னும் பொருள், உடலில் உள்ள கொலஸ்ட்ராலை குறைக்கிறது. இருப்பினும் அளவுக்கு அதிகமாக குடிக்காமல் அளவோடு குடித்து வளமோடு வாழ வேண்டும்.

**பாதாம்**



பாதாமில் வைட்டமின் ஈ மற்றும் ஃப்ளேவனாய்டு அதிகம் உள்ளது. இது உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலை கரைத்து, இதயத்திற்கு செல்லும் இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்பை தடுத்துவிடும்.

**ஓட்ஸ்**



ஓட்ஸில் கரையக் கூடிய நார்ச் சத்து உள்ளது. இது உடலானது கொலஸ்ட்ராலை உறிஞ்சாமல் பாதுகாக்கும்.

**அவோகாடோ**

அவோகாடோவில் கொலஸ்ட்ராலை உடலில் இருந்து குறைக்கும் பொருளான பீட்டா-சிட்டோஸ்டெரால் உள்ளது. இது உடலில் இருந்து குறைந்தது 15 சதவீத கொலஸ்ட்ராலை குறைத்துவிடும்.

– தொடரும் –

## குடல்புண் (அல்சர்)

**தவிர்க்க வேண்டியவை**

புகைபிடித்தலையும் திருமணமாகும் வரை உடல் உறவையும் தவிர்க்க வேண்டும். 9 முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுக்கும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். தாம்பத்திய வாழ்வைத் தொடங்குவதற்கு முன்னதாகவே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது நல்லது. முதல் ஊசிக்குப் பிறகு எட்டு வாரங்கள் கழித்து இரண்டாவது டோஸ், ஆறு மாதங்கள் கழித்து மூன்றாவது டோஸ் என எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் சிறுவர்களும், இளம் ஆண்களும்கூட இதைப் போட்டுக்கொள்ளலாம். இதனால் பெண்ணுக்கு இன்னும் அதிகப் பாதுகாப்பு கிடைக்கும்.

என்னதான் தடுப்பூசி போட்டாலும், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை செய்துகொள்வதன் மூலம் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் உயிரிழப்புக்களை முற்றிலுமாகத் தடுக்க முடியும்" என்றார்.

முன்னோடி தமிழ்நாடு



இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைக்கு வரக்கூடிய ஒவ்வொரு பெண்ணுக்கும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை செய்யும் முன்னோடியான திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. பாப்ஸ்மியருக்கு பதில் வயாஃவிலி (ஏஜயு/ஏஜடுஜ) மற்றும் ஸ்கால்ஸ்கோப்பி முறையில் பரிசோதனை செய்யப்படுகிறது. இதன் மூலம், தமிழ்நாட்டில் கர்ப்பபைவாய் புற்றுநோயால் ஏற்படக்கூடிய உயிரிழப்பு பெருமளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

21 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இரண்டு ஆண்டு இடைவெளியில் தொடர்ந்து பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். பாப்ஸ்மியர் பரிசோதனையில், கர்ப்பப்பை வாயில் உள்ள செல்கள் ஒரு ஸ்லைடில் தேய்த்து எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பப்படும். இதில், செல்களின் அபரிமித வளர்ச்சி கண்டறியப்பட்டால், உடனடியாக பயாப்சி பரிசோதனை செய்து கர்ப்பப்பை வாய் புற்றுநோய் உறுதிபடுத்தப்படும்.

– முற்றும் –

# குறுக்கெழுத்து புதிர் 027

முடிவுத் திகதி : 25.09.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ரு | 17 | | ■ | ■ | 2 | | 16 |
| | ■ | 3 | | 18 ஸ் | | | | |
| 4 | 19 | 5 | | | 20 | | | ■ |
| 6 | | | ■ | | லை | ■ | 7 | |
| | | பூ | 8 | | | | ம் | 21 |
| 9 | | | ■ | 10 | 22 | | | |
| | ம் | 23 | ■ | 11 | | வா | | |
| 12 | | | | வு | 13 | | | |
| 14 | | | 15 | | | | ■ | ■ |

### இடமிருந்து வலமாக

1. பானுடன் எப்போதும் விரும்பிச் சாப்பிடும் கறி
2. அவுஸ்திரேலியா செல்லப் பயன்படுவது
3. மேளத்துடன் இணையும் இசைக்கருவி
4. ஊதுவது - குழம்பியுள்ளது
5. இப்பத்திரிகையின் தலைமை ஆசிரியரே லசந்த விக்ரமதுங்க
6. தூரத்தைக் குறிக்கும் சொல்
7. குழந்தைகள் விரும்பிக் கேட்பது
8. சிவனின் வடிவங்களில் ஒன்று
9. யுத்தத்தைக் குறிக்கும் சொல்
10. வியாபாரத்தில் பகுதி முதலிட்டவர்
11. இவர் கண் திறந்தால் யோகம் தான்
12. இதன் அறுபது மணித்தியாலமொன்று ஆகம்
13. ஜுராசிக் பார்க் படத்தின் கதாநாயகன்
14. இங்கு தான் சிவன் நடனம் ஆடினாராம்
15. குறும்புகள் பல செய்பவன்

### மேலிருந்து கீழாக

1. பனை மரத்தின் காய்
5. கிழக்கில் அனல் மின் நிலையம் நிறுவப்படவுள்ள பிரதேசம்
7. இப் பறவை கறுப்பு குழம்பியுள்ளது
9. முருகனின் ஆலயம் அமைந்துள்ள செல்வத்துடன் கூடிய இடத்தின் பெயர்
12. பணப்பெருக்கைக் குறிக்கும்.
16. நிறைக்கு எதிர்ச்சொல்
17. அழிவைக் குறிக்கும் சொல்
18. இங்கிலாந்தின் நாணயம்
19. மனிதக் கழிவகற்றும் உறுப்புக்களில் ஒன்று
20. கண்ணன் செய்வது
21. பலர் கூடியிருக்கும் இடம்
22. தாயக்கட்டைக்கு ஒத்த சொல்
23. அவலும் இதுவும் கடவுளுக்கு விருப்பம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் 026 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 13 ஜா | கு | தீ | ன் | ■ | 2 அ | 14 வி | சு |
| றி | ன் | ■ | ■ | ■ | 3 இ | டை | ய | ன் |
| 4 ந் | சி | த | னை | ■ | ளை | 5 கா | ப் | பு |
| 6 த | ரா | 15 சு | ■ | 16 க | ஞ | ப் | பு | ■ |
| 7 ப | ணி | ப் | பா | ள | ர் | 8 பு | 17 ர | 18 வி |
| 9 னை | அ | ர | னு | சு | ■ | ■ | ங் | ண் |
| சா | ல | 23 பா | ம் | ஞ் | 20 த | ■ | ன் | 19 ண |
| ட் | 11 நா | 10 த | ஸ் | 22 வ | ர | ம் | 21 கூ | க |
| டு | ■ | ம் | ■ | ■ | வை | 12 சு | டு | ம் |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வி. ச. பிரசானினி*
*இல. 90, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.*
*திருமதி. கே. ஆஷா*
*12/21, கண்டிவீதி, திருகோணமலை.*




**சிந்திக்க .. ..**

பிறர் குறையைப் பார்ப்பவன்
முதலில்
தன் குறையை உணர வேண்டும்
பிரதீஷ்

## காகமும் நாய்க்குட்டியும் — குட்டிக்கதை

ஒரு வீட்டில் நாய்க்குட்டி ஒன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதனைக் கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று, என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது.

அதற்கு காக்கையார், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால் என்னை மட்டும் வெறுத்து கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம்.

இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள் தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க்குட்டி. எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள் தான் சிறந்தவர்கள்! என்று சொன்னது காகம். உண்மைதான்! என்றது நாய்க்குட்டி.



பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள் தானே! என்று பெருமையோடு சொன்னது காகம். ஆமாம். அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்? குயில் கூவும் போது அதன் இனிமையை ரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை ரசித்துப் பாராட்டுகிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம்.

ஏன் என்று நான் சொல்கிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், உங்களிடம் இருக்கும் திருடுதல், ஏமாற்றுதல் போன்ற சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள் என்று கூறியது நாய்க்குட்டி.

காகம் ஒன்றும் பேசமுடியாது வாயடைத்து தலை குனிந்தது.

**– சில தீய செயல்கள் பல நல்லவற்றை இல்லாதொழித்துவிடும் –**



M.M.அஜிமல் கான் பாத்திமா றஜாஸ்
இக்பால் நகர், நிலாவெளி



— கு.ஜசுகாஸ்ரீ — தரம்- 4,
கோபாலபுரம் தமிழ் வித்தியாலயம்,
திருமலை



ஜே.மயூரதி
அலஸ்தோட்டம், திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 10 மாணவர்களின் இடை உயரம் 132.3செ.மீ எனின், 10 மாணவர்களினதும் மொத்த உயரம் யாது?

02. வியாபாரியொருவர் 500 முட்டைகளை வாங்கினார். அதில் பழுதடைந்த முட்டைகளினதும் உடைந்த முட்டைகளுக்குமான நிகழ்தகவுகள் முறையே 0.02, 0.05 உம் ஆகம்.
 1. எத்தனை முட்டைகள் பழுதடைந்தவையாக உள்ளன?
 2. எத்தனை முட்டைகள் நல்லவையாக உள்ளன?

03. இரு வட்டங்களின் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதம் 2 : 1 ஆகம். அவற்றின் விட்டங்களுக்கிடையிலான விகிதங்களைத் தருக.

04. குறித்த நாளொன்றில் தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அந்நிய செலாவணி விளம்பரத்தின் ஒரு பகுதி பின்வருமாறு

சிங்கப்பூர் டொலர் - இலங்கை ரூபாய் 66.50
அமெரிக்க டொலர் - இலங்கை ரூபாய் 96.00
ஸ்டேர்லிங் பவுன் - இலங்கை ரூபாய் 148.00

 1. அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு?
 2. அன்றைய தினம் தீர்வையற்ற கடையொன்றிலிருந்து அமெரிக்க டொலர் 250க்கு விலைக்கு வாங்கப்பட்ட தொலைக்காட்சி ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு?
 3. 25% இலாபத்தோடு விற்க வேண்டுமெனில் தொலைக்காட்சிப் பெட்டியில் குறிக்க வேண்டிய விலை யாது?
 4. 5% கழிவோடு அதனை கைக்காசுக்கு வாங்க முடியுமெனில், தொலைக்காட்சிப் பெட்டிக்கு செலுத்த வேண்டிய தொகை யாது?

05. வட்டமொன்றின் மிகப்பெரிய நாணின் நீளம் 6செ.மீ எனின், அவ்வட்டத்தின் ஆரையைக் காண்க?

06. காரணி காண்க? $x^2 - 5x - 14$

07. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $98^2 - (5 \times 98) - 6$

08. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது x இன் பெறுமானத்தைக் காண்க?
$\log 12 + 3\log x + 2\log 18$

09. பெறுமானம் காண்க. 1- 0.001

10. ரூ5000 இன் 40% எவ்வளவு?

11. 4 வேலையாட்களுக்கு ஒரு வேலையைச் செய்ய 12 நாட்கள் எடுத்தது. அதே வேலையின் அரைப்பங்கை 3 நாட்களில் முடிக்க எத்தனை வேலையாட்கள் தேவைப்படும்?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
30.08.2014 முதல் பிரதி சனி தோறும் மு.ப10-12 வரை G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

01. சூழல் வெப்பநிலை கூடுதலாக இருக்கும் ஒரு நாளில் சாதாரண நாளைக் காட்டிலும் கூடுதலான வியர்வை ஏற்படும். இச்செயன்முறையை எடுத்துரைப்பதற்குப் பின்வரும் எக்கூற்று மிகவும் உகந்தது?
 1. மிகையாக வியர்த்தல் நோய் நிலையாகும்
 2. வியர்த்தல் தன்னிச்சையாக நடைபெறும் தூண்டற்பேறாகும்
 3. வெப்பமான நாட்களில் வியர்வையுடன் கழிவுப்பொருட்களும் வெளியேறும்.
 4. வியர்த்தல் அகவெப்பநிலையை மாறாமல் பேறும் செயலாகும்.

02. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
 1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்

03. ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு கள்ளித் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம்
 1. இலைகள் சதைப்பிடிப்புள்ளதாக இருத்தல்
 2. இலைகள் அருகில் இருத்தல்
 3. தண்டுகள் முட்களைக் கொண்டிருத்தல்
 4. பரந்த வேர்த் தொகுதிகள் இருத்தல்

04. இதயத் தடிப்பைக் கட்டுப்படுத்தும் மூலையின் பகுதி எது?
 1. மூளையம் 2. மூளி 3. கபச்சுரப்பி 4. நீர்வளைய மையவிழையம்

05. மனிதனின் நரம்புத் தொகுதியுடன் தொடர்பு படும் இரு நிகழ்ச்சிகள் அ, ஆ ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ளன.
அ - எப்போதும் கண் இமை மூடி திறத்தல்
ஆ - மாம்பழத்தைக் காணும் போது உமிழ்நீர் சுரத்தல்
இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றிய சரியான கூற்றுக்கள் யாது?
 1. அ, ஆ ஆகிய இரண்டும் தெரிவினைகள்
 2. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சையின்றிய செயல்கள்
 3. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சைவழி இயங்கும் செயல்கள்
 4. அ தெரிவினையாக இருக்கும் அதேவேளை ஆ இச்சையின்றிய செயலாகும்.

06. பின்வருவனவற்றுள் எக்கட்டமைப்பு ஊத்தேக்கியாவின் குழாயினால் தொண்டையுடன் தொகுக்கப்பட்டுள்ளது?
 1. நடுச்செவி 2. நுரையீரல்கள் 3. மூக்கு 4. இரப்பை

07. தெசுத்தொசுத்தெரோன் ஓமோனின் தொழில் யாது?
 1. உடலில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
 2. குருதிக் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுதல்
 3. பெண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
 4. ஆண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்

08. ஒட்டுண்ணியைப் பின்வரும் எந்தக் கூற்று நன்கு எடுத்துரைக்கின்றது?
 1. ஓர் அங்கியின் மூலம் வேறோர் அங்கிக்கு நோயைத் தோற்றுவிக்கும் தொடர்புடமை
 2. இரு அங்கிகளுக்கிடையே நிலவும் இரண்டுக்கும் பயன்தரும் தொடர்புடமை
 3. இரு அங்கிகளும் ஒன்றாக வாழ்ந்து கெகாண்டு ஓர் அங்கி மற்ற அங்கிக்கு தீங்கு பயக்கும் தொடர்புடமை
 4. ஓர் அங்கி வேவோர் அங்கியை இரையாக்கிக் கொண்டு தனது சக்தித் தேவையை நிறைவேற்றிக் கொள்ளல்.

09. பின்வருவனவற்றில் எது தனியெண்களின் பாரம்பரிய இயல்பாக அமைவதில்லை?
 1. உயரம் 2. நுண்மதி 3. தோலின் நிறம் 4. தசை வளர்ச்சி

பின்வரும் விலங்குகளுள் உபயவாழி எது?
 1. தவளை 2. முதலை 3. உடும்பு 4. நீர்பாம்பு

குருதிப்படலத்தை சோதிப்பதன் மூலம் டெங்கு நோயை இனங்காணலாம். எக்குருதிக் கூறின் எண்ணிக்கை குறைவதன் மூலம் அதனை இனங்காணலாம்?
 1. நடுநிலை நாடி 2. யோசி நாடி 3. மூல நாடி 4 . சிறுதட்டுக்கள்

ஒரு வித்திலைத் தாவரங்களுக்கு விசேடமான இயல்பு பின்வருவனவற்றுள் யாது?
 1. மூல வேர் இருத்தல் 2. நார் வேர்த் தொகுதி இருத்தல்

## பாடம் : வரலாறு

01. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?

02. கல்லாயுதங்களும், வானர மனிதனுடைய பற்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

03.
| | |
|---|---|
| 1. எல்லாளன் | A அசேலன் |
| 2. சேனன்-குத்தின் | B 2 ஆம் பராக்கிரமபாகு |
| 3. கலிங்க மன்னன் | C வலகம்பா |
| 4. தாதிகன் | D துட்டகைமுனு |

மேற்படி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்டவர்களின் சரியான ஒழுங்கு
1.ABDC 2.DABC 3.DACB 4.CDAB

04. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி
 1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய
 3. அபயகிரி 4. ஜேத்தவனராமய

05. கலிங்க மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
 1.மினிப்பே 2.கோவிந்தமல
 3.யாப்பகூவ 4.தம்பதெனியா

06. குருணாகல் இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக்கூடிய விடயம்
A பாண்டிய ஆரியச் சக்கரவத்தி புனித தந்ததாசவை அபகரித்துச் செல்லல்
B ராஜபுத்திர வீரர்களின் உதவியுடன் புவனேகபாகு ஆட்சி அமைத்தல்
C நிஸ்ஸங்க அழக கோணாரால் கோட்டை அமைத்தல்
D அம்புலுகல குமாரயா ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்குதல்
1. AC 2. AB 3.AD 4.BC

07. கண்டி இராசதானி கீழ் போர்த்துக்கேயரால் முன்னெடுக்கப்பட்ட போர்களை தலைமை ஏற்ற தளபதிகளின் சரியான ஒழுங்கு

| | |
|---|---|
| 1. தந்துரே | A தியோகுத மெலோ |
| 2. பலன | B பேரோலோபேஸ் த டீசூஸா |
| 3. ரந்தெனிவெல | C கொன்ஸ்தாந்தின் டீசூஸா |
| 4. கண்ணொருவ | D தொன் ஜெரணிமோ அஸவேது |

1. ACDB 2.BDCA 3.BDAC 4.ABDC

08. இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்
 1. 2 ஆம் இராஜசிங்கன்
 2. 1 ஆம் இராஜசிங்கன்
 3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

09. பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு
 1. ஸ்பானியா 2. போர்த்துக்கல்
 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து

10. இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும்நபர்
 1. பீஸ்மார்க் 2. கரிபாஸ்டி
 3. கவூண்கவுர் 4. ஜோசப் மஸினி

11. அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி
 1. கலிங்கற்தொட்டி 2. சுருங்கை
 3. அலைதாங்கி 4. கலிங்கல்

12. பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்த எழுத்தாளர்
 1. வோல்டயர் 2. கரிபால்டி
 3. [illegible] 4. [illegible]

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Put the verb into the present continuous or present prefect continuous.
1. Maria ............................... (learn) English for two years.
2. Hello, Tom. I ................................ (look) for you all morning. Where have you been?
3. Why ......................................... (you / look) at me like that? stop it!
4. We always go to ireland for our holidays. We ........................ (go) there for years.
5. I ........................ (think) about what you said and I've decided to take your advice.
6. 'Is Ann on holiday this week?' 'No, she ........................... (work)'.

Ex 02: For each situation, ask a question using the words in brackets.
1. You have a friend who is learning Arabic.
You ask : (how long/ learn/ Arabic)
<u>How long have you been learning Arabic?</u>

2. You see somebody fishing by the river. You ask : ......... (how many fish/ catch?)

3. A friend of yours is a teacher. You ask : ......................... (how long // teach?)

4. Some friends of yours are having a party next week. You ask :..................... (how many people / invite)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதி வசூலிப்பில்.....

தெரிவிக்கின்றன.

ஊழியர் நலன்புரிச் சங்கங்கள் அதிஸ்டலாபச் சீட்டுக்களை அச்சிட்டுப் புத்தகங்களாகக் கொனர்ந்து வர்த்தகர்களிடம் கையளித்து விட்டுச் செல்வதாகவும் அதற்கான பணத்தை வர்த்தகர்களே செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை குறித்த நிகழ்ச்சிகளுக்குப் பங்களிப்புச் செலுத்த மறுக்கும் வர்த்தகர்களிடம் இனிக் கொள்வனவு செய்ய மாட்டோம் எனச் சில அரச திணைக்களங்களின் நிதிக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் மறைமுக எச்சரிக்கையை விடுத்திருப்பதாகவும் வர்த்தகர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர். பங்களிப்புச் செய்பவர்களிடம் மட்டும் கொள்வனவு செய்வது நவீன கையூட்டு முறையாக அமையுமா? எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

## பாடசாலை மாண.....

அவர்களைத் தொடர்பு கொண்ட போது இம்மாணவர்கள் பாடசாலைக்குப் பொதுவாகவே வருகை தருவதில்லை என்றும் அவர்களின் கல்வித்தரம் மிகக் குறைவாக இருப்பதாகவும் அவர்கள் எழுதவாசிக்கத் தெரியாதவர்களாக இருப்பதாகவும் தெரிவித்தார். அவர்கள் வகுப்பு 6ல் இருந்தே அவ்வாறுதான் இருப்பதாகத் தெரிவித்த அவர் அவர்களுக்காக விசேட வகுப்பொன்றை உருவாக்கியுள்ளதாகவும் அவர்கள் அவ்வகுப்பிற்கு வருவதேயில்லை என்றும் தெரிவித்தார். அத்துடன் அம்மாணவர்களின் நன்நடத்தை கேள்விக்குரியது என்றும் தெரிவித்த அவர் அவர்களை எதிர்வரும் ஆண்டில் பரீட்சைக்கு அனுப்ப உத்தேசித்திருந்ததாகவும் தெரிவித்தார்

கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் இவ்வாறான செயற்பாடுகளே நடைபெறுவதாகப் பொதுவான குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்நடவடிக்கை பாடசாலையின் அடைவு மட்டத்தை அதிகரித்துக் காட்டும் பொருட்டு மேற்கொள்ளப்படுவதாகவே கல்வியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

## நீதி கிடைக்கும்வரை ...

இருக்கின்றோம்.

சாட்சியங்களின் பதிவுகள் தொடர்பாக தெரிவித்த தூதுவராலயம் அவை தொடர்பாக இப்போது வரை எவ்வித உதவிகளையும் தூதுவராலயம் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

"இலங்கையின் சட்டமா அதிபர், கொலை தொடர்பாகக் கண்கண்ட சாட்சியங்கள் உட்பட அனைத்துச் சாட்சியங்களிடமிருந்தும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளதுடன் அச்சாட்சியங்களில் எவரேனும் பிரான்ஸ் நாட்டில் வதிகின்றனராயின் அவர்களிடமிருந்தும் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் நாட்டில் வதிபவர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்வது தொடர்பாக தூதுவராலயம் தற்போதுவரை நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை'' என தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

## புலமைப் பரீட்..

மணித்தியாலங்கள் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புலமைப் பரிசில் பரீட்சை இரண்டு மணி நேரம் பதினைந்து நிமிடங்கள் நடைபெற்றன.

எதிர்வரும் 2015ம் ஆண்டு முதல் ஒன்றரை மணித்தியாலம் பரீட்சை நடைபெறவுள்ளது.

இரண்டு வினாத்தாள்களுக்கு பதிலாக இனி ஒரே வினாத்தாள் மட்டுமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் மாதிரி வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு நவம்பர் மாதம் சகல பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப்பட உள்ளது.

## மாவட்டச் செயலாளர் ....

செயலகங்களில் சாதாரணமாக நடைபெற்றுவரும் வேளையில் திருகோணமலைப் பிரதேச செயலகம் பல லட்சம் ரூபா செலவில் பாரிய பிரியாவிடை நிகழ்விற்கு ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிகின்றது. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் 1000.00 ரூபாய்களைத் தமது பங்களிப்பாகச் செலுத்த வேண்டும் என விழா ஏற்பாட்டாளர்கள் கோரியிருப்பதாகவும் அவ்வாறு செலுத்த பல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை என்றும் தம்மை வெளிக்காட்ட விரும்பாத அலுவலர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஏனைய பிரதேசச் செயலகங்களில் ஊழியர் நலன்புரிச் சங்கங்களூடாகவே பிரியாவிடை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை மாவட்டச் செயலகத்தில் எல்லாப் பிரதேசச் செயலக நிறைவேற்றுத்தர அதிகாரிகள் ஒவ்வொருவரினதும் பங்களிப்புடன் பிரியாவிடைக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

## 25 வீதக் குறைப்பு ....

முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள இ.மி.ச பொதுமக்கள் பாவனை ஆணையகத்துடன் இணைந்து இ.மி.சவும் திறைசேரியும் புதிய கட்டணக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்றும் அதற்கமைய அடுத்துவரும் மாதத்திலேயே கட்டணக் குறைப்பை நடைமுறைப்படுத்தமுடியும் என்றும் தெரிவித்துள்ளது. ஆனாலும் இம் மாதத்திற்கான கட்டணக் கழிவானது எதிர்வரும் மாதத்தில் பாவனையாளருக்கு வழங்கப்படும் என்றும் இ.மி.ச உறுதியளித்துள்ளது.

## ஆசிய உட்கட்டுமான...

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் போட்டியாளராக உருவாகி வருகின்றது. மேற்கூறிய அமைப்புக்கள் யாவும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் செல்வாக்கிற்குட்பட்டிருப்பதால் அவற்றை விடுத்து ஆ.உ.அ.வங்கியை உருவாக்க 2010ம் ஆண்டில் சீனா முதலாவது முன்மொழிவை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை சீன சனாதிபதியுடன் இலங்கை மேற்கொண்டுள்ள 27 ஒப்பந்தங்களும் புதுடெல்லியை அசூசைக்கு உட்படுத்தியிருப்பதாக ஏஎவ்பி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

புதிய கடற்தள நகரத்தைக் கொழும்பில் உருவாக்கும் சீனாவின் ஒப்பந்தமானது அக்கடற்தள நகரத்தின் 583 ஏக்கர்களில் மூன்றில் ஒரு பங்கை தனது ஆளுகைக்கு உட்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைச் சீனாவிற்கு வழங்கியுள்ளது.

மீளக் கோரக்கூடியதாக இந்த கடற்தள நகர நிலப்பரப்பு சீனாவிற்கு வழங்கப்பட்டாலும் இந்த முதலீட்டுத் திட்டம் தொடர்பில் இந்திய நிர்வாகிகள் அச்சமடைந்திருப்பதாகவே அச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. இந்தியாவைச் சுற்றி சீனா தனது பண முதலீடுகளை விரிவாக்கி வருகின்றமையானது இந்தியாவை சுற்றிவளைக்கும் சீனாவின் வேண்டுமென்றே வரையப்பட்ட திட்டம் ஆகும் என டெல்லி அரசியல் அவதானிகள் கருதுவதாகவும் அச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் அந்தப் பிராந்தியத்திலான இந்திய செல்வாக்கை பாதிக்கும் வகையிலான உடன்படிக்கை வரைபுகளில் கைச்சாத்திட்டு உள்ளதாக அமெரிக்க நியூயோர்க் டைம்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் முத்துச் சரம் என அழைக்கப்படும் தந்திரோபாயமான தெற்காசியாவூடான கடற்படை மற்றும் கடல் பயண அடைவுகளை பாதுகாக்கும் இந்த முயற்சி இந்தியாவை நிலைகுலைய வைத்துள்ளது என்றும் அந்தச் செய்தி தொடர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனார்கேணி....

அதே தினத்தில் அவருக்குச் சரீரப் பிணையளித்த திருகோணமலைவாசியொருவரும் நீதிமன்றுக்குச் சமூகமளித்து தனது சரீரப் பிணையை விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்ததை அடுத்து மன்றுக்குச் சமூகமளிக்காமை மற்றும் பிணை விலக்கல் ஆகிய காரணங்களால் மறு திகதியிடப்படாத தடுப்புக் காவலுக்கு அவர் ஆளாகியிருப்பதாக தெரிகின்றது.

அதேவேளை இக் கொலை வழக்கில் பிணை வழங்கப்பட்டிருந்த இரண்டாவது சந்தேகநபரான ஏ.ஏ. டொன் தினேஸ் சிந்தக என்பவர் கடந்த ஜூன் மாதம் அவரது சொந்த ஊரில் நிகழ்ந்த கொலையொன்றில் சந்தேக நபராகக் கைதாகி கொழும்பில் தடுப்பில் இடப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இருபத்தாறு வயதான இளைஞன் ஒருவனை ஐயனார் கேணியில் நடைபெற்ற கொலை போன்றே கொலைசெய்தமைக்காகவே இவர் கைதாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐயனார்கேணியில் வைத்துக் கொலை செய்யப்பட்ட கேதீஸ்வரனின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் அவரது மனைவி ஹம்சத்வனி தற்போதுவரை கைது செய்யப்படவில்லை. அவரைக் கைதுசெய்யும் வகையில் சர்வதேசப் பிடிவிறாந்து இன்ரபோல் ஊடாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## கட்டுமானங்களில் .....

அனாதைகள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்களின் பிரச்சனைகள் ஒரு பொது எடுகோளின் கீழ் தீர்க்கப்படமுடியாதவைகளாக உள்ளன. அவற்றைத் தனித்தனியாக எடுத்து நோக்கி தீர்வுகளை உருவாக்க வேண்டும். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் சமூகமயப்படுத்தப்பட்ட போதும் அவர்களுக்குப் பொருத்தமான தொழில்கள் ஏதுமின்றி அவர்கள் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ள போது அரசாங்கள் தனியே தனது கவனம் முழுவதையும் உட்கட்டுமான அபிவிருத்தியிலேயே குவித்துள்ளது. ஆனால் மிக முக்கிய வாழ்வாதாரப் பிரச்சனைகளை தவிர்த்துவிட்டுள்ளது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## சனாதிபதி....

திணைக்களத்தால் வலயங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய கல்வி வலயங்களான திருகோணமலை - 104, திருகோணமலை வடக்கு - 62, கிண்ணியா-103, மூதூர் -102, கந்தளாய் -51, கல்குடா-109, மட்டக்களப்பு 105, மட்டக்களப்பு மத்தி 103, மட்டக்களப்பு மேற்கு 105, பட்டிருப்பு 102, கல்முனை 102, சம்மாந்துறை 103, அக்கரைப்பற்று 103, திருக்கோவில் 104, அம்பாறை 100, தெஹியத்தகண்டி 100, மகாஓயா 104 என்ற கணக்கீட்டில் மாணவர்கள் தேர்வாகியுள்ளனர்.

## கடத்தப்பட்ட ஆசிரியை..

நடாத்துமாறு நீதவான் கட்டளையிட்டிருந்ததுடன் அதற்குக் கடந்த 18ம் திகதியையும் நிர்ணயித்திருந்தார்.

குறித்த திகதியில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் தன்னைக் கடத்திய மூவரையும் கடத்தப்பட்டவர் அடையாளம் காட்டியதை அடுத்து அவர்கள் எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த ஆசிரியை காணாமற்போனதை அடுத்து காவல்துறையினர் அனைத்து காவல்நிலையங்களுக்கும் உடனடியாகச் செய்தியை அனுப்பியதாலேயே இக் கடத்தல் நாடகம் சில மணித்தியாலங்களுக்குள் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகின்றது.

## மட்டு வாவியில்..

வாவியின் கற்பாறைகளில் இடிபட்டிருந்த விமானத்தை மீனவர்கள் பாதுகாப்பாக தரையிறக்கப்பகுதிக்கு இழுத்து வந்திருந்தனர். அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக கடற் பயண வான்சேவையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்பயண திருத்துவதற்காக விமானப் படையின் தொழில்நுட்ப விமானம் வரவழைக்கப்பட்டு, சீர் செய்து பின்னர் மீண்டும் சேவையினை ஆரம்பித்துள்ளது.




## இரவு தொழுகை இரண்டு. இரண்டா!!

அதனால் தான் உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்திலும் கூட பதினொன்று ரக்அத்துகளை தொழுவிக்குமாறு ஏவியுள்ளார்கள்.

அடுத்தது மார்க்கத்தில் ஒரு சட்டம் விசயமாக பேசும் போது அந்த சட்டம் சம்பந்தமான எல்லா ஹதீஸ்களையும் முன் வைத்து தான் முடிவெடுக்க வேண்டும். ஒரு ஹதீஸை மட்டும் வைத்து முடிவெடுப் போம் என்றால் அவர், அவர் ஒவ்வொரு ஹதீஸை வைத்து முடிவெடுக்க ஆரம்பித்து விடுவார்கள்.

உதாரணத்திற்கு இரவுத் தொழுகை இரண்டு, இரண்டு என்பதிலிருந்து எவ்வளவும் தொழலாம் என்றால், நபி (ஸல்) அவர்கள் ஒன்பது ரக்அத்கள் இரவில் தொழுதார்கள் என்ற ஹதீஸை முன் வைத்து, இரவுத் தொழுகை ஒன்பது தான் என்று சொல்ல வேண்டியது வரும். நபி (ஸல்) அவர்கள் இரவிலே ஏழு ரக்அத்துகள் தொழுதார்கள், எனவே இரவுத் தொழுகை ஏழு தான் என்று சொல்ல வேண்டி வரும். எனவே இரவுத் தொழுகை சம்பந்தமான எல்லா ஹதீஸ்களையும் ஒன்றிணைத்து பின் வரும் முடிவுக்கு வரலாம்.



நபி (ஸல்) அவர்கள் இரண்டு, இரண்டு ரக்அத்துகளாக பதினொன்று ரக்அத்துகள் தொழுதுள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் அந்த பதினொன்று ரக்அத்தை தொழும்போது ஒரே ஸலாமில் ஒன்பது ரக்அத்துகளையும், மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒரே ஸலாமில் ஏழு ரக்அத்துகளையும், தொழுதுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம். எனவே நபியவர்கள் காட்டித் தராத ஒன்றை மார்க்கமாக நடைமுறை படுத்த முடியாது.

இந்த, இந்த, அறிஞர்கள் சொல்லியுள்ளார்களே என்பது இஸ்லாத்தின் அளவு கோல் கிடையாது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

முற்றும் .. ..




## வாரமொரு ஜோக்

- அருணன் -

அந்த மனநல வைத்தியசாலையிலுள்ள சிறு மைதானமொன்றில் சில மனநோயாளிகளை வரிசையாக நிறுத்தி தனது வைத்தியத்தினால் அம்மன நோயாளிகளின் மனநிலையில் எந்தளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான சோதனை நடவடிக்கையில் அதி தீவிரமாக ஈடுபட்டிருந்தார் அந்த மனநல வைத்தியர்.

அம்மைதானத்தின் நடுவே ஒரு மனித உருவ சிலை வைக்கப்பட்டிருந்தது. தனது கையிலிருந்த தடியினால் அச்சிலையின் ஒவ்வொரு பகுதியையும் தொட்டு அது என்ன என்பதை கூறுமாறு ஒவ்வொரு மனநோயாளிகளிடமும் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்திருந்தவாறு எந்த நோயாளியும் சரியான பதிலை கூறவில்லை. அவர் தலையை தொட்டு காட்டினால் கால் என்றும் கையை காட்டினால் வாய் என்றும் தவறான பதிலையே கூறி அவரை வெறுப்பேற்றிக் கொண்டிருந்தார்கள். நாம் இவ்வளவு சிரமப்பட்டு வைத்தியம் செய்தும் பலனில்லாது போய்விட்டதே என மனவேதனைபட்டுக் கொண்டிருந்த அவ் வைத்தியர் அப்போதுதான் கவனித்தார் அதில் ஒரு மனநோயாளி மட்டும் தனது கேள்விக்கு சரியான பதிலை கூறிக்கொண்டிருப்பதை. மகிழ்வடைந்த வைத்தியர் அந்நோயாளியை அழைத்து மீண்டும் அச்சிலையை ஒவ்வாரு பகுதியாக தொட்டுக்காட்ட அந்நோயாளியும் மிக சரியான பதிலை கூறவே நமது வைத்தியருக்கு பெருமை தாளவில்லை. ஓடோடிசென்று தலைமை வைத்தியரை அழைத்து வந்து தான் குணமாக்கிய அந் நோயாளியை காண்பித்தார்.



தலைமை வைத்தியரும் அம்மனநோயாளியை பார்த்து இவர்களனைவருக்கும் பதில் சரியாக தெரியாதிருக்க நீ மட்டும் எவ்வாறு கண்டுபிடித்தாய் என வினவினார்.

உடனே அம்மனநோயாளி தனத தலையின் முன் பகுதியில் கையை வைத்து அதற்கெல்லாம் கிட்னி வேண்டும் ஐயா. மற்றவர்களிடம் அது இல்லையே என்றானே பார்க்கலாம்.



## பைனப்பிள் குழம்பு

**தேவையான பொருட்கள்**

பைனாப்பிள் - பாதியளவு, நேந்திரம் பழம் - பாதி, பச்சை மிளகாய் - 4, இஞ்சி - சிறுதுண்டு, மஞ்சள்தூள் - ½ தே.கரண்டி, உப்பு - தேவைக்கு, புளிக்காத கெட்டித்தயிர் - 1.:.2 கப், தேங்காய் எண்ணை - 3 மே.கரண்டி,



**செய்முறை**

பைனாப்பிள் தோலை முள் வரை நன்றாக நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி எடுங்கள். நேந்திரம்பழத்தின் தோலை நீக்கிவிட்டு அதை சிறுசிறு துண்டுகளாக்கவும். இரண்டையும் குக்கரில் வேக வைக்கவும். தண்ணீர் அதிகமாக இருந்தால் வற்றவைக்கவும். 3 விசில் வரும் வரை வந்ததும், துண்டுகளை எடுத்து ஆறவைக்கவும். இப்போது தயிர், மஞ்சள்தூள் சேர்த்து மிக்சியில் போட்டு அடிக்கவும். அதை பைனாப்பிள் துண்டுகளுடன் கலக்கவும். வாணலியில் தேங்காய் எண்ணை ஊற்றி கடுகு, வெந்தயம், துண்டு பண்ணிய காய்ந்த மிளகாய் ஆகியவற்றைப் போட்டு தாளிக்கவும். இந்த தாளிப்பில் பைனாப்பிள் துண்டுகளை சேர்க்கவும். இப்போது சூடான சுவையான பைனாப்பிள் குழம்பு தயார்.

## வசீகரிக்கும் அழகு வேண்டுமா? இத ட்ரை பண்ணுங்களேன்

முகப்பருக்கள் மற்றும் கறைகளை நீக்குவதில் முல்தானி மெட்டி மிக முக்கிய பங்காற்றுகிறது. முகத்தில் உள்ள இறந்த செல்களை நீக்குவதுடன், சருமத்தை மிருதுவாகவும் மாற்றுகிறது. இது எண்ணெய் உறிஞ்சும் தன்மை கொண்டதால், அனைத்து விதமான சருமத்தினரும் பயன்படுத்தலாம்.

- கோடை காலத்தில் சில ஒவ்வாமை(அலர்ஜி), சருமம் சிவத்தல் மற்றும் தடித்தல் இருந்தால் முல்தானி மெட்டி ஒரு நல்ல நிவாரணியாகவும் பயன்படுகிறது.
- எண்ணெய் வடியும் முகம் உள்ளவர்கள் முல்தானி மெட்டியுடன் ரோஜா நீர் சேர்த்து பேஸ் பேக் போட்டால் மென்மையான முகத்தை பெறலாம்.
- உல ர்ந்த மற்றும் தடிமனான தோல் உடையவர்கள் முல்தானி மெட்டியுடன் பாதாம் பேஸ்ட் மற்றும் பால் கலந்து பேஸ் பேக் போட்டு 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும்.



இதனை தொடர்ந்து செய்து வந்தால் படிப்படியாக உங்கள் சருமம் பொலிவடைவதை காணலாம். குறிப்பாக வறண்ட சருமம் உள்ளவர்கள் இதை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

- சிலருக்கு பருக்கள் மற்றும் அம்மை நோய்களால் ஏற்பட்டு தழும்புகள் இருக்கும். அவர்கள் முல்தானி மெட்டியுடன் 1 டீஸ்பூன் அரைத்த கேரட் விழுது மற்றும் 2 டீஸ்பூன் ஆலிவ் ஆயில் கலந்து தழும்புகள் உள்ள இடத்தில் போட்டு 20 நிமிடம் ஊற வைத்து முகத்தை கழுவ வேண்டும்.

## மூக்கு சொர சொரப்பை நீக்க சில டிப்ஸ்



**ஸ்கரப்**

வீட்டிலேயே சூப்பரான ஸ்கரப் தயாரித்தும் பயன்படுத்தலாம். அதற்கு அரிசி அல்லது ஓட்ஸை பொடி செய்து, அதனை ஈரமான முகத்தில் சிறிது நேரம் தேய்க்க வேண்டும். இப்படி செய்து வந்தால், சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் மற்றும் அழுக்குகள் வெளியேறி, வெள்ளைப்புள்ளிகளும் போய்விடும்.

**கிளின்சர்**

மற்றொரு அட்டகாசமான ஒரு வழி தான் கிளின்சர். அதற்கு 2 டேபிள் ஸ்பூன் பாலில், 1 டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாறு மற்றும் 1 டேபிள் ஸ்பூன் உப்பு சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவினால், முகத்தில் உள்ள சொரசொரப்பான வெள்ளைப்புள்ளிகள் நீங்கி, சருமம் மென்மையாக இருக்கும்.

முற்றும் .. ..

## முகத்தின் உதடழகு!!!



உதடுகள் அழகாக, சிவப்பாக இல்லையே என்ற ஏக்கம் பல பெண்களுக்கும் இருக்கும். உதடுகளுக்கு கூடுதல் அழகூட்ட நாம் பயன்படுத்தும் லிப்ஸ்டிக்கை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். லிப்ஸ்டிக்கை தேர்வு செய்யும் போது உங்கள் நிறத்திற்கு ஏற்ற வகையில் பார்த்து வாங்கவேண்டும். விலை மலிவானவைகளை வாங்கவே கூடாது. அவைகள் உங்கள் வாய்க்குள் சென்று பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். மெல்லிய நிறத்தைப் பயன்படுத்துபவர்கள் லிப்ஸ்டிக்கைப் போட்ட பின் லிப் கிளாஸ் பயன்படுத்தினால் எடுப்பாக இருக்கும். லிப்ஸ்டிக்கை போடுவதற்கு முன்னர் அதே நிறத்திலான லிப்ஸ்டிக் லைனரைக் கொண்டு உங்கள் உதடுகளுக்கு அவுட்லைன் கொடுத்துவிட்டு பின்னர் அந்த கோடுகளுக்குள் லிப்ஸ்டிக் போடுங்கள்.



லிப் லைனர் பயன்படுத்தும்போது, பெரிய உதடு உள்ளவர்கள், உதடுகளுக்கு உள்ளே வரைந்தால், உதடுகள் சிறியதாக தெரியும். உதடுகள் பெரியதாக தெரிய வேண்டுமெனில், முதலில் தேவையான நிறத்தில் லிப்ஸ்டிக்கை போட்டுக்கொள்ள வேண்டும். பிறகு வெள்ளை நிற லிப்ஸ்டிக்கை உதட்டின் நடுவில் தடவினால், உதடுகள் பெரிதாக பளிச்சென்று தெரியும்.



சிவப்பு நிற பெண்கள் ஆரஞ்சு, சிவப்பு, பிங்க் நிற லிப்ஸ்டிக் பூச வேண்டும்.



உதடு பெரிதானவர்கள், சின்ன உதடாக உள்பக்கம் வரைந்து, அதில் லிப்ஸ்டிக் பூச வேண்டும்.

மாநிறப் பெண்கள் லைட் பிரவுன், லைட் செர்ரி நிற லிப்ஸ்டிக் பூச வேண்டும்.



இதழ்கள் ஈரமாக இருந்தால், முகப்பவுடரை தடவி, அதன் பிறகு லிப்ஸ்டிக் போட வேண்டும்.

லிப்ஸ்டிக் பூசும் போது, இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக பூச வேண்டும் மேலும், கீழும் போட்டு இழுக்கக் கூடாது.

## பெண்களின் அழகுக்கு மெருகூட்டும் பாதணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செய்தி : சசிகுமார்

## விளையாட்டு சுகாதார விழா



கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் அலுவலக ஊழியர்களுக்கு இடையே விளையாட்டு விழா ஏகாம்பரம் மைதானத்தில் கடந்த 13. 14ம் திகதிகளில் நடைபெற்றது.

## மென்பந்து கிரிக்கற் போட்டி

இலங்கை மென்பந்து கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடு பூராகவும் நடாத்தப்பட்டு வரும் இருபதிற்கு இருபது மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் மட்டக்களப்பு மாவட்டப் போட்டிகள் கடந்த 14.09.2014 அன்று ஆரையம்பதி பொது விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டன.



மேற்படி சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தேர்தல் தொகுதி ரீதியாக போட்கள் நடாத்தப்பட்டு அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக் கிடையில் மாவட்ட மட்டப்போட்டி நடத்தப்பட்டது.

## மல்யுத்தப் போட்டியில் பதக்கம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்குரிய விளையாட்டு விழாவின் மல்யுத்தப் போட்டிகள் 14, 15, 16 ஆந் திகதிகளில் கொழும்பு அசோக்கா வித்தயாலயத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையைச் சேர்ந்த என்.பிரகாஸ் என்ற மாணவன் 17 வயதிற்குரிய 58கி.கி கடேற் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், என்.நிசோத் என்ற மாணவன் 19 வயதிற்குரிய 55கி.கி கடேற் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

## நட்புறவு மகளீர் உதைப்பந்தாட்டப் போட்டி



எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மகளிர் உதைப்பந்தாட்ட போட்டியில் கலந்து கொள்ள உள்ள மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கடுக்காமுனை வாணி வித்தியாலய மகளீர் அணிக்கும், மாகாண மட்ட போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கடுக்காமுனை வாணி வித்தியாலய மகளீர் அணிக்குமான நட்புறவு உதைப்பந்தாட்ட போட்டி ஒன்று கடுக்காமுனை வாணி வித்தியாலய மைதானத்தில் கடந்த 17.09.2014 அன்று நடைபெற்றது.

## ஜனாதிபதி கிண்ணத்திற்கான கிரிக்கற் சுற்றுப் போட்டி

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் தலைமையிலான நீலப்படையணியின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட ஜனாதிபதி சவால் கிண்ணத்திற்கான கிறிக்கட் சுற்றுப் போட்டியொன்று மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரி மைதானத்தில் 14.09.2014 நடைபெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியில் 27 அணிகள் பங்குபற்றின.

மட்டுப்படுத்தப்பட்ட ஐந்து ஓவர்கள் கொண்ட இந்த மென்பந்து சுற்றுப்போட்டியில் ஏறாவூர் பற்று பிரதேசத்தினைச் சேர்ந்த லவ் பேட்ஸ் கழகமும் ஏறாவூர் நகர் கிரான் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஐங்கரன் கழகமும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டன. அவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

## எவ்வித போராட்டங்களையும் எதிர்கொள்ள தயார் : மஹேல



சிறுவர்களுக்கு உரிய அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு கிடைக்கப் பெறவேண்டும். இதனை பெற்றுக் கொடுப்பதற்காக எவ்வித போராட்டங்களையும் நாம் எதிர்கொள்ள தயார் என இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

## ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட இலங்கையர் கைது




கால்பந்தாட்ட ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட இலங்கையர் உள்ளிட்டவர்களுக்கு பிரித்தானியாவில் சிறைத்தண்டனை விதிதிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் கடைநிலை கால்பந்தாட்ட லீக் போட்டியொன்றில் இவ்வாறு இவர்கள் ஆட்ட நிர்ணய சதியை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சங்கக்காரா சாதனை வீரரா



இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்ககாரா எப்போதும் விவாதத்திற்குரிய சாதனை வீரராக இருக்கிறார். பல சாதனைகளை கொண்டுள்ள சங்கக்காரா டெஸ்ட் கிரிக்கெட்டில் எப்போதும் சிறந்த வீரராக இருக்கிறார். அணியை திறம்பட நடத்துவதிலும் திறமையானவராக விளங்கியவர். ஒரு இடது கை துடுப்பாட்டக்காரராக உயரத்தில் அமர்ந்திருப்பவர். இருப்பினும் இவர் சச்சின், லாராவின் அளவு ஒப்பிட்டு பேச முடிந்தவரா என்ற கேள்விகளும் உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

### • ஐ.எஸ்.ஐ.எஸ்-ன் திட்டத்தால் அதிர்ச்சி

அவுஸ்திரேலிய பொதுமக்களில் சிலரை தெரிவு செய்து, பொது இடத்தில் வைத்து தலையை துண்டிக்க ஐ.எஸ்.ஐ.எஸ். திட்டமிட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

### • மீண்டும் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்



தீவிரவாதிகளின் :.போரமில் ஒரு தீவிரவாதி புதிய திட்டம் ஒன்றை குறித்து எழுதியுள்ளார். அதில், ஒரு பெப்சி போத்தலில் எபோலா வைரஸை கலந்து அதை ஒரு பையில் வைத்து அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள நீர் நிலைகளில் கலந்து விட வேண்டும் என்று அந்த நபர் தெரிவித்துள்ளார். மேலும், ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பி அவர்களை எபோலா தாக்கியதும், அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி அங்கு வைரஸை பரப்பச் சொல்ல வேண்டும் என்பதும் அந்த நபரின் பரிந்துரைகளில் ஒன்று.

### • நைஜீரியாவில் கட்டிட விபத்து

நைஜீரியாவில் கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் பலி எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 131 பேர் உயிருடன் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

### • ஆசிரியரிடம் பிடிபட்ட 17 அடி அனகொண்டா



French Guiana என்ற பகுதியை சேர்ந்த ஒரு கணித ஆசிரியர் 17 அடி நீளமுள்ள அனகோண்டா போன்ற ஒரு பாம்பை உயிருடன் பிடித்து அதை ஒரு நாள் இரவு முழுவதும் தன்னுடைய வீட்டில் வைத்துள்ளார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### • விமானத்தின் விமானி தற்கொலை

கடந்த மார்ச் மாதம் 8ம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பெய்ஜிங்கிற்கு கிளம்பிய மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் எம்.ஹெச். 370 மாயமானது. அம்மாயமான மலேசிய விமானத்தின் விமானி மனநலம் பாதிக்கப்பட்டதால் தற்கொலை செய்திருக்கலாம் என்று விமான விபத்து விசாரணை நிபுணர் இவான் வில்சன் தெரிவித்துள்ளார்.

### • முன்னாள் அமைச்சரை குப்பை தொட்டியில் தூக்கி போட்ட எம்.பிக்கள்



உக்ரைன் நாட்டில் பாராளுமன்றம் கூடியபோது முன்னாள் அதிபர் Viktor Yanukovich அவர்களின் அமைச்சரவையில் இருந்த Vitaly Zhuravsky, என்பவர் உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள தீவிரவாதிகள் குறித்து ஒருசில சர்ச்சைக்குரிய கருத்தை கூறியதால் பாராளுமன்றத்தில் இருந்து அனைத்து எம்பிக்களும் கடும் ஆத்திரம் அடைந்தனர். உடனே அவரை நோக்கி வேகமாக வந்த எம்.பிக்கள் Vitaly Zhuravsky, அவர்களை குண்டுக்கட்டாக தூக்கி பாராளுமன்றத்தின் வெளியே கொண்டு வந்து அங்கிருந்த குப்பைத்தொட்டி ஒன்றில் வீசியெறிந்தனர்.

### • எபோலா வைரஸால் உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



மேற்கு ஆபிரிக்காவில் பரவி வரும் எபோலா வைரஸ் நோயானது உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார். மேலும் அந்த நோய்க்கு எதிரான உலகளாவிய செயற்பாடு தேவையாகவுள்ளதாக் கூறினார். மேற்படி, வைரஸால் இந்த வருடம் 2,461பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

### • ஓடும் காரில் வைத்து இளம்பெண் கற்பழிப்பு

இந்திய தலைநகர் டெல்லியில் 23 வயது பெண் ஒருவர் தனது ஆண் நண்பர் மற்றும் வேறு இரு நபர்களால் ஓடும் காரில் வைத்து கற்பழிக்கப்பட்டார். தங்கள் வெறியை தீர்த்துக்கொண்ட மூன்று வெறி நாய்களும் பின் அப்பெண்ணை தெற்கு டெல்லியில் உள்ள நேரு பேலஸ் பகுதியில் தூக்கி வீசி விட்டு சென்றுவிட்டனர்.

### • பாப்பரசர் அனுமதி

கத்தோலிக்க அருட் பணியாளர் ஜோசப் வாஸை இலங்கையின் முதல் புனிதராக திருநிலைப்படுத்த புனித பாப்பரசர் பிரான்சிஸ் அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### • ஜாக்கி மகனுக்கு 3 ஆண்டு சிறை



போதை பொருள் குற்றம் தொடர்பாக பிரபல நடிகர் ஜாக்கி சானின் மகன் ஜெய்சீ சான் முறைப்படி பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளார். போதை பொருள் உபயோகிப்பதற்கு மற்றவர்களை அனுமதித்த குற்றத்திற்காக கைதாகியுள்ள ஜாக்கி சானின் மகனக்கு, அதிகபட்சமாக 3 வருட சிறை தண்டனை வழங்கப்படும் வாய்ப்பு உள்ளது என்று வழக்கறிஞர்கள் இன்று தெரிவித்துள்ளனர்.

### • தாயாரைத் தொடர்ந்து மகன்

உத்தரபிரதேச மாநிலம் மீரட்டை சேர்ந்த ஸ்வெட்லானா சிங் (வயது 25) என்ற 7 அடி 2 அங்குலம் உயரமான பெண், கடந்த 2012 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் உயரமான பெண் என்ற சாதனையை படைத்திருந்தார். தற்போது இவரது மகன் 5 வயதிலேயே, 5 அடி 7 அங்குலம் உயரத்தை அடைந்ததால் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார்.

### • உணவுப் பாதுகாப்பு – தைவான் அரசு

உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை தைவான் அரசு கடுமையாக செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. விதிமுறைகளை மீறி உணவுப் பொருட்களைத் தயாரிப்பவர்களுக்கு ஏழு வருட சிறைத்தண்டனையும், இதன் பாதிப்பால் மரணம் சம்பவித்தால் குற்றவாளிகளுக்கு ஆயுள்தண்டனையும், அதிக பட்ச அபராதமும் விதிக்கப்படும் என்று தைவான் அரசு தெரிவித்துள்ளது.

### • என்னையா கடுப்பாக்கினீங்க?

பிரான்ஸ் நாட்டில் பெண் ஒருவர், அரசாங்கம் பொதுமக்களிடம் வசூலிக்கும் அதிகப்படியான வரி விதிப்பிற்கான தனது எதிர்ப்பை காட்ட தனது வரியினை ஆயிரக்கணக்கான நாணயங்களாக செலுத்தியுள்ளார்.

ஆட்ரி டி என்ற பெண்ணுக்கு இந்த ஆண்டு 1107 யூரோக்கள் வரித்தொகையாக விதிக்கப்பட்டுள்ளது. இதனை சரியான நேரத்தில் கட்டுவதற்காக தனது காரை விற்ற அவர், வரியைக் கட்ட சென்றபோது ஒரு தவணையில் 300 யூரோக்கள் மட்டுமே கட்டமுடியும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டதால் மூன்று தவணையில் கட்டியுள்ளார். இதனால் சலிப்படைந்த அப்பெண் மீதமுள்ள 207 யூரோக்களையும் 30 கிலோ கிராம் எடையளவில் நாணயங்களாக மாற்றிச்சென்று அதிகாரி முன் அளித்துள்ளார்.

### • சூப்பர் ஸ்டார் குமுறல்

எனது பெயரை தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்று சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடத்தப்பட்ட ஆசிரியை மீட்பு! சந்தேக நபர்கள் தடுப்பில்!!!

திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த 26 வயதான இளம் ஆசிரியை ஒருவரைக் கடத்த மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து கடத்தல் சந்தேக நபர்கள் மூவர் கைதாகித் தடுப்பிலிடப்பட்டுள்ளனர்.

தனியார் கணணிக் கல்விநிலையமொன்றில் ஆசிரியையாகப் பணியாற்றிய இப் பெண்ணின் மீது காதல் கொண்ட இளைஞன் ஒருவரின் அதிரடி நடவடிக்கையே இக்கடத்தல் முயற்சி எனத் தெரிகின்றது.

கடந்த 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சொகுசுவான் மூலம் மேற்படி ஆசிரியையைக் கடத்தும் முயற்சியில் மூவரடங்கிய குழாமொன்று ஈடுபட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து குறித்த ஆசிரியையைக் கடத்திக்கொண்டு பதவியாவைத் தாண்டிச் செல்லும் வழியில் வைத்தே காவல்துறையினரால் குறித்த வான் தடுத்து நிறுத்தப்படடு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் கடத்தப்பட்டவரும் மீட்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை அன்றைய தினமே நீதிமன்றில் முன்நிலைப்படுத்திய காவல் துறையினருக்கு அடையாள அணிவகுப்பொன்றை 13



# சனாதிபதி நிதியத்தின் புலமைப் பரிசில் விடுவிப்பு

கிழக்கு மாகாண உயர்தர மாணவர்களுக்கான சனாதிபதி புலமைப் பரிசில்களை வழங்கு-வதற்கான நிதி விடுவிக்கப் பட்டுள்ளது.

இக் கொடுப்பனவானது வலய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ளது.

முதற்கட்டக் கொடுப்பன்வாக மாதமொன்றுக்கு ரூபா. 500 என்ற அடிப்படையில் முதல் வருடக் கொடுப்பனவாக ரூபா. 6,000 கிழக்கு மாகாணத்தின் 17 கல்வி வலயங்களைச் சேர்ந்த 1,622 மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ளது.

இம் முதற்கட்டக் கொடுப்பனவிற்கான நிதி ரூபா 97 இலட்சத்து 32 ஆயிரம் கிழக்கு மாகாணக் கல்வித் 13

# புலமைப் பரீட்சையில் மாற்றம் ஒன்றரை மணிநேரப் பரீட்சை வினாத்தாள்!



ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றரை 13

# மாகாணத்தில் முதலிடம்

## கணித நாடகப் போட்டியில் புனித மரியாள் கல்லூரி வெற்றி

கணித நாடகப் போட்டியில் கிழக்கு மாகாணத்தில் புனித மரியாள் கல்லூரி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. கணித நாடகத்துறையில் மாகாணத்தில் இப்பாடசாலை பெற்ற அதியுயர்ந்த பெறுபேறுகளில் ஒன்றாக இவ் வெற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து எதிர்வரும் 16ம் திகதி தேசியப் போட்டிகளில் இந்நாடக அணி போட்டியிடவுள்ளது.



பங்குகொண்ட மாணவிகள், மரியாள் கல்லூரி அதிபர், கணித பாடப்பொறுப்பு ஆசிரியர்களுடன் நாடகத்தை எழுதி, இயக்கிய மலைமுரசின் ஆசிரியர் மாயன்



# "ஆசிய உட்கட்டுமான அபிவிருத்தி வங்கியில் இணைந்துகொள்ளுங்கள்" இலங்கைக்கு சீன சனாதிபதி அழைப்பு

ஆசிய உட்கட்டுமான அபிவிருத்தி வங்கியினை (ஆ.உ.அ.வ) உருவாக்கும் எண்ணத்துடன் அவ் வங்கியின் உருவாக்குனர்களில் ஒருவராக இலங்கையும் இணைந்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை சீன சனாதிபதி இலங்கைப் பயணத்தில் வெளியிட்டுள்ளார்.

100 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பதியப்பட்ட முதலாக் கொண்டு உருவாக்கப்பட்டுவரும் ஆசிய உட்கட்டுமான அபிவிருத்தி வங்கியானது சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி மற்றும் 13

# மட்டு வாவியில் இறங்கிய கடற்பயணக் கப்பல் விபத்து



மட்டக்களப்பு நகரின் வாவிப் பகுதியில் உல்லாசப் பிரயாணிகளை ஏற்றி வந்த கடற்பயண விமானம் வாவியில் இறங்கியபோது கற்பாறையில் சிக்குண்டு 18ம் திகதி பிற்பகல் விபத்துக்குள்ளானது.

உல்லாசப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்த கடற்பயண விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இதன்போது அதில் பயணம் செய்த உல்லாசப் பிரயாணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். 13



மலைமுரசு
MALAIMURASU

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 06.09.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org